Koviloor Digital Library

91/1

நகரத்தார் குரல்

சமூக, இலக்கிய மாத இதழ்

Acc.No. 45784

சூலை 98



கற்பகப் பிள்ளையாரின் கவின்புகழ் ஆலயத்தில்
நற்றவப் பயனாய்வந்து ராசாராம் வணங்குகின்றார்
சிற்பரன் செங்கோல்வாங்கும் சிதம்பரம் அருகில்நிற்க
பொற்புடன் பசுவும்கன்றும் பொலிந்திடும் இனியகாட்சி

ஆசிரியர்
வி.என். சிதம்பரம்

Koviloor Digital Library

இந்த் பாங்க் ஹவுசிங் லிமிடெட்

நிர்வாக அலுவலகம்: 178, கோடம்பாக்கம் நெடுஞ்சாலை,
சென்னை – 600 034. தொலைபேசி: 8284137, 8284349, 8257701

நீங்கள் வீடுகட்ட பெரும் கடனுதவிக்கு வட்டி விகிதம்

குறைக்கப்பட்டுள்ளது!

கடன் தொகை	வட்டி விகிதம் %
Up to ரூ. 50,000/-	12.25
ரூ. 50,001 to 2,00,000	15.00
ரூ. 2,00,001 to 5,00,000	15.50
ரூ. 5,00,001 to 10,00,000	16.00
ரூ. 10,00,001 to 25,00,000	16.50

- தனி நபர்கள், வெளிநாட்டில் பணிபுரியும் இந்தியர்களுக்கு வீடு கட்ட, வாங்க, மற்றும் தற்போதைய இல்லத்தில் மாற்றங்கள் செய்ய கடன் வழங்கப்படுகிறது.
- சுலபத் தவணைகள்
- 15 நாட்களில் கடன் வழங்கும் உத்தரவு தரப்படும்.
- வீடு ரிப்பேர் செய்ய, பழைய வீட்டை வாங்க.

இனிய இல்லங்கள் அமைத்திட உதவும் நிறுவனம்

அழகர்கோவில் மெயின் ரோடு, கே.புதூர், மதுரை – 625 007 ✆ 538511

கற்பக வினாயகர் பில்டிங், முதல்மாடி, கீழ ராஜ வீதி,
புதுக்கோட்டை – 622 001 ✆ 20343

1087, மிஷன் சாலை, தஞ்சாவூர் – 613 001. ✆ 20526.

டி.டி. நகர், முதல் வீதி, காரைக்குடி – 630 001. ✆ 36380

மற்றும் கிளைகள் தென்னகமெங்கும்

Koviloor Digital Library

KOVILOOR ADEEVAN LIBRARY, KOVILOOR
A. No. 45784

உ

சிவமயம்

நகரத்தார் குரல்

(சமூக, இலக்கிய மாத இதழ்)

ஆசிரியர்:
வி.என். சிதம்பரம் செட்டியார்

வெளியிடுபவர்:
நடராஜ் அண்ணாமலை

துணை ஆசிரியர்
கவிஞர். அப்பச்சி சபாபதி

அலுவலகம்:
108–109, நேதாஜி சாலை,
அறை எண் 12, மாடி
மதுரை–625 001.
தொலைபேசி: 746206

குரல் 17
ஒலி 6

வெகுதான்ய
ஆனி

சூலை
1998

பண்புடை வேதம் பயந்த பரனுக்கு
மண்புடை வையம் இடந்த வராகற்கு
தெண்புனல் பள்ளிஎம் தேவபிரானுக்கு என்
கண்புனை கோதை இழந்தது கற்பே.

- நம்மாழ்வார் (திருவாய்மொழி)

ஆண்டுச் சந்தா ரூ. 60–00 டெபாசிட் சந்தா ரூ. 500–00

கன்னியர்கள் வாழ்வுபெற மாலை
காளையர்கள் வாழ்வுயர வேலை

Koviloor Digital Library

புதுக்கோட்டை அன்னபூரணி ஏஜென்சீஸ். நடராஜா ஏஜென்சீஸ் நிறுவனங்களின் உரிமையாளரும். புதுக்கோட்டை நதரத்தார் சங்க செயலாளருமான. கொப்பனாபட்டி திரு. அ. ந. தியாகராஜன் செட்டியார். திருமதி - விசாலாட்சி ஆச்சியின் புதல்வன் T. காசி B. TECH, Leather (Assistant Manager- Production M/S. KIRAN OVERSEAS EXPORTS LTD, CHENNAI) க்கும். ஆ. தெக்கூர் கருமுத்து டாக்டர் AL. ராமநாதன் செட்டியார் MD. DCM அவர்களின் புதல்வி மீனா MA -க்கும் 15. 5. 98 அன்று ஆ. தெக்கூரில் சிறப்பாக திருமணம் நடைபெற்றது.

திருமணத்திற்கு சென்னை நெஸ்லே நிறுவனத்தாரும். கொச்சின். AV. தாமஸ் நிறுவனத்தாரும் புதுக்கோட்டை நகரத்தார் சங்கத்தினரும். ஈரோடு டாக்டர் பெருமக்களும். தொழில் அதிபர்களும். நண்பர்களும் பெருமளவில் வந்திருந்து மணமக்களை வாழ்த்தினர்.

சங்க ஆண்டுவிழா

ராணிப்பேட்டை நகரத்தார் சங்கத்தின் முதலாம் ஆண்டு விழா 21.6.98 ஞாயிறு மாலை சிறப்பாக கொண்டாடப்பெற்றது.

எஸ். ஆர். பி. டூல்ஸ் நிறுவனத்தின் தலைவர் திரு. எஸ் ஆரெம். பி.எல் சுப்பிரமணியன் செட்டியார் அவர்கள் தலைமைதாங்கினார்கள். பேராசிரியர் மா. கண்ணப்பன் அவர்கள் நம் நகரத்தாரின் பண்பாடு. கலாச்சாரம். தொழில்திறமை ஆகியவற்றின் பெருமைகளை எடுத்துச் சொல்லி அரங்கில் தமிழ் மணம்மும் நகைச்சுவைத் தென்றலும் வலம் வரச் செய்தார்கள். குழந்தைகளின் பல்சுவை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. சங்கத்திற்கு வரும் ஆண்டின் நிர்வாகிகளாக கீழ்கண்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

தலைவர்	: வேந்தன்பட்டி ரத்தினம் செட்டியார்
துணைத்தலைவர்	: எஸ் மணி
செயலாளார்	: ஆத்தங்குடி லெ. அண்ணாமலை
இணைச்செயலாளர்	: செவ்வூர் வீ. அண்ணாமலை
பொருளாளர்	: பூலாங்குறிச்சி எல் இராமநாதன்
நிர்வாக ஆலோசகர்கள்	: கோட்டையூர் சித. கிருஷ்ணன்.
	நற்சாந்துபட்டி எம். மெய்யப்பன்.
	வேந்தன்பட்டி அழ. முருகேசன்.

Koviloor Digital Library

மொழிபெயர்ப்பாளர் நிர்மாணித்த சென்னைச் சிவன் கோவில்!

சென்னையை ஆண்ட கிழக்கு இந்தியக் கம்பெனியில் மொழி பெயர்ப்பாளராய் (துபாஷா) பணி ஆற்றிய சிவபக்தர் தளவாய்ச் செட்டியாரின் பக்தியை மெச்சி காஞ்சிபுரத்திலிருந்து கச்சாலீசுவரர் சென்னைக்கே வந்து கோவில் கொண்டார் இப்போது சென்னை அரண்மனைக்காரத் தெருவில் உள்ள அருள்மிகு கச்சாலீசுவரர் திருக்கோவில்தான் அது.

திருமால் ஆமை வடிவோடு சிவபெருமானுடன் காட்சி தந்தமையால் 'கச்ச பேஸ்வரர்' என்று இக்கோவில் பெயர் பெற்றது. நாளடையில் இது மருவி 'கச்சாலீசுவரர்' என்று ஆனது.

இக்கோவிலின் கல்வெட்டில் உள்ள செய்தி கீழே தரப்பட்டுள்ளது:

கிழக்கிந்தியக் கம்பெனியில் துபாஷாகப் பணி ஆற்றிய தளவாய்ச் செட்டியார் என்ற அன்பர் தினம் சென்னையிலிருந்து காஞ்சீபுரம் சென்று ஸ்ரீ கச்சபேஸ்வரர் ஆலயத்தில் வழிபட்டு வருவது வழக்கம். ஒரு நாள் இயற்கையின் சீற்றத்தால் அவர் காஞ்சியிலிருந்து சென்னை மீள முடியாமல் போக இறைவனே அவரது பணியினை சென்னையில் செய்து முடித்திருப்பதைக் கண்டார்; அதுவன்றி அவர் பக்தியினை உலகுக்கு உணர்த்த வேண்டி இறைவனே இங்கு எழுந்தருளினார்.

தளவாய்ச் செட்டியார் அவர்களினால் 1725 இல் இத்திருக்கோவில் நிர்மாணிக்கப்பட்டு 1728இல் முதல் கும்பாபிசேகம் நடந்தேறியுள்ளது. அதை அடுத்து சில கும்பாபிசேகங்களும் தொடர்ந்து 1962 இல் ஒரு மகா கும்பாபிசேகமும் நடைபெற்றுள்ளது. 20-2-1984ல் பல திருப்பணிகள் செய்யத் துவங்கி பூர்த்தி பெற்று மகாகும்பாபிசேகம் 9-7-1989 ஞாயிறன்று சிறப்புற நடைபெற்றது.

தகவல் : அ. வல்லநாட்டான்.

முக்கியமான மூன்று

அக்கறை இல்லாமல் செய்யக்கூடாதது : திருமணம், வியாபாரம், பிரயாணம்.

வீணாக்கக் கூடாதது : ஆற்றல், பணம், நேரம்.

பிள்ளையார்பட்டியில் கூட்டுத் திருமணம்

திருச்சி நதரத்தார் சங்கத்தின் முயற்சியில் நதரத்தார்களின் ஆதரவில் பிள்ளையார் பட்டியில் வருகிற ஆவணித் திங்கள் 18 ஆம் நாள் (3-9-1998) வியாழக்கிழமை கூட்டுத் திருமணம் நடைபெற உள்ளது. என்றும் மேற்படி கூட்டுத் திருமணத்தில் பங்கேற்று திருமணம் செய்ய விரும்புவோர். நதரத்தார் சங்கம். 2 ஒத்தமால் தெரு திருச்சி - 620 002 என்ற முகவரிக்குக் கடிதம் எழுதி விண்ணப்ப படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம். என்றும் விண்ணப்ப வடிவங்களைப் நிறைவு செய்து அனுப்ப 1-8-98 கடைசி நாள் என்றும் திருச்சி சங்கம் அறிவித்துள்ளது.

Koviloor Digital Library

உ

சிவமயம்

சுவீகாரம்: பையன் தேவை

வயிரவன் கோவிலைச் சேர்ந்த பட்ட மேற்படி (B.E/ MBA/ MCA) அல்லது அதற்கு இணையாகப் படித்த நல்ல குணமுள்ள பையன் சுவீகாரம் செய்து கொள்ளத் தேவை.

திருமணம் செய்யவிருக்கும் 23 வயதுடைய பெண். B.E., முடித்து. Tata Consultancy Services Ltd-ல் Assistant Systems Analysist ஆக பணி புரிந்து வருகிறார்

விருப்பமுள்ளவர்கள் போதிய விரபங்களுடன் கீழ்காணும் மலர் முகவரிக்கு எழுதவும்.

பெட்டி எண் - 264
C/o நகரத்தார் குரல்
108 – 109 நேதாஜி ரோடு மாடி
மதுரை – 625001

மணமகள் தேவை

நாட்டுக் கோட்டை நகரத்தார் நேமம் கோவிலைச் சேர்ந்த மணமகன். 45 வயது. மனைவியை இழந்தவர். மருத்துவத் துறையில் சிறப்பு மருத்துவம் M.D. படித்து. அரசு வேலையில் இருப்பவர் இரண்டும் மகன்களை (வயது முறையே 16. 11 வருடங்கள்) உடைய இவருக்கு மணமகள் தேவை

மணமகள் வயது 27 முதல் 32 க்குள் இருக்கலாம். படித்து பட்டம் பெற்றவராக இருத்தல் அவசியம். நல்ல குடும்ப அமைப்பிலிருந்து வருபவராகவும். பாச உணர்வு உடையவராகவும் இருத்தல் சிறப்பு. குடும்ப பொறுப்பை கவனித்தால் போதுமானது (சம்பளப் பணி எதற்கும் செல்ல வேண்டாம்)

விருப்பம் உள்ளவர்கள். பெண்ணின் பெயர். கோயில் - பிரிவு. ஊர். பெற்றோர். உடன் பிறந்தோர் பற்றியவிபரம். பெண்ணின் வயது. படிப்பு. பிறதகுதிகள். ஜாதகம் மற்றும் புகைப்படம் ஆகியவற்றுடன் கீழ்கண்ட முகவரிக்கு தொடர்பு கொள்ளவும்.

Ph. 04333 / 60161

பழ.நா. திருஞானசம்பந்தம் செட்டியார்
ஆரூரான் அங்காடி
54-D அண்ணாசாலை, பொன் புதுப்பட்டி – 622408

Koviloor Digital Library

V.KN.

ஸ்ரீ V.KN. டிராவல்ஸ்

E.14, கார்ப்பரேஷன் ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ்
T.P.K. ரோடு
மதுரை – 625 001
போன்: 740944 வீடு: 601336

தினசரி மதுரை to சென்னை

(ரெகுலர் சர்வீஸ்)

புறப்படும் நேரம் இரவு 8-30 மணி

சூப்பர் டீலக்ஸ் வீடியோ கோச் பஸ்

❖

சென்னை to மதுரை

புறப்படும் நேரம் இரவு 8-30 மணி

H.O. 24, தணிகாசலம் ரோடு
சில்வர் பார்க் அபார்ட்மெண்ட்ஸ்
(மிடில் மெயின் கேட் என்ட்ரன்ஸ்)
ஹிந்தி பிரச்சார சபா எதிர்புறம்
தி.நகர் – சென்னை –17

போன்: 4331274P.P. வீடு: 4996758

குறிப்பு: *எங்கள் பஸ்ஸில் பயணம் செய்யும் வாடிக்கையாளர்களுக்கு ஒரு லிட்டர் கொண்ட அழகிய மினரல் வாட்டர் பாட்டில் ஒன்று அன்பளிப்பாக வழங்கப்படும்.*

எங்களிடம் டூரிஸ்ட்பஸ், வேன், கார் வாடகைக்குக் கிடைக்கும்.

Koviloor Digital Library

திருமணங்கள்

☛ தேவகோட்டை மா. சுந்தரம் செட்டியாரின் புதல்வன் S. சோமசுந்தரம் Bsc, PGDBM க்கும், தேவகோட்டை கும. அரு . வி . வி . நாராயணன் செட்டியார் புதல்வி N. காயத்ரி B.Com க்கும் 27.5.1998 அன்று திருமணம் சிறப்பாய் நடைபெற்றது.

☛ அலவாக்கோட்டை கண. நா. சுப. நாராயணன் செட்டியார் புதல்வன் ராஜேஷுக்கும், பாகனேரி பழ.நாக.வே. நாகப்ப செட்டியார் புதல்வி மீனாவுக்கும் 27.5.1998 அன்று புதன் கிழமை திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

☛ பொன். புதுப்பட்டி இராம. தியாகராசன் செட்டியார் புதல்வன் கண்ணன் (எ) இராமசாமி D. Pharm க்கும் நெற்குப்பை லெ. ராம. லெட்சுமணன் செட்டியார் புதல்வி மீனாட்சிக்கும் 27.5.98 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

☛ வினையாச்சிலை மு. பழ. மு. பழ. முத்தழகப்ப செட்டியார் புதல்வன் கிருஷ்ணன் BE க்கும், வலையப்பட்டி PL. A. நடராசன் செட்டியார் புதல்வி ஏகம்மை M.A க்கும் 27.5.98 அன்று வலையபட்டியில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

☛ காரைக்குடி வெ.சு. அழகப்ப செட்டியார் புதல்வன் பத்திரிநாரயணன் பி. எஸ்ஸிக்கும். அரண்மனை சிறுவயல் போராசியர் டாக்டர் திரு. பழநியப்ப செட்டியார் புதல்வி கண்ணம்மை (எ) ஆனந்தி (எம்.காம்) க்கும் 29.5.98 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

☛ வேந்தன்பட்டி நா. லெ. சுப்பிரமணியம் செட்டியார் புதல்வன் நாகப்பன் B.E., (Environmental Engg..) க்கும், பொன் புதுப்பட்டி ப. கா. அ. பழ. சுப்பையா செட்டியார். புதல்வி அழகம்மை Bsc, (Bio. chem) க்கும் 4. 6. 98 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

☛ பாகனேரி தெ. நா. சொ. நாச்சியப்ப செட்டியார் புதல்வன் ராமநாதனுக்கும், நாட்டரசன் கோட்டை அரு. ராம. அருணாசலம் செட்டியார் புதல்வி ஜெயலட்சுமிக்கும் 14.6.98 அன்று நாட்டரசன் கோட்டையில் சிறப்பாக திருமணம் நடைபெற்றது.

☛ சொக்கநாதபுரம் சி. சாத்தப்பசெட்டியார் புதல்வன் சொக்கலிங்கம் B Com, M.BA. க்கும், நாட்டரசன் கோட்டை சுப. தியாகராஜன் செட்டியார் புதல்வி தெய்வானை B. Com, M.CA க்கும் 14.6.98 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

☛ அலவாக்கோட்டை ராம.சீ. சுந்தரம் செட்டியார் புதல்வன் சீனிவாசன் (எ) சிவசுந்தரம் B.A.க்கும், காரைக்குடி ராம. சுப. நா. சுப்பிரமணியன் செட்டியார் புதல்வி சிவகாமி (எ) வள்ளியம்மை BA க்கும் 14–6–98 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

☛ தேவகோட்டை வெ. லெ. இராமநாதன் செட்டியார் புதல்வி வள்ளியம்மை (எ) மாலதிக்கும், பள்ளத்தூர் லெ. லெட்சுமணன் செட்டியார் புதல்வன் சுப்பிரமணியனுக்கும் 14–6–98 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

☛ நாட்டரசன்கோட்டை அ. கண. மணிவாசகம் செட்டியார் புதல்வன் பாலசுப்பிர மணியனுக்கும், கோட்டையூர் சி.அ.சி.லெ. காசிசெட்டியார் புதல்வி வள்ளியம்மைக்கும் 14–6–98 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

Koviloor Digital Library

நினைத்தாலே இனிக்கும்...

Sumam

ஐஸ்கிரீமின்
உண்மையான
சுவையை சுவைத்து
மகிழ்வீர்

மேலும் விபரங்களுக்கு
அணுகவும் :

அருண் கூல்டிரிங்ஸ்
தியாகர் ரோடு,
தேவக்கோட்டை.

சுவாதி எஞ்ஜன்லில்
மாதா டவர்ஸ்
பெரியார் சிலை அருகில்
செக்காலைரோடு, காரைக்குடி.

B.M.எஞ்ஜன்சீஸ்
மெயின்ரோடு,
கே.கே.நகர், மதுரை.

மற்றும் சென்னை, கோவை, கோபி, திருநெல்வேலி, கோவில்பட்டி, ஈரோடு, அன்னூர்,
பொள்ளாச்சி, பவானி, கொடைக்கானல், திருப்பூர் ஆகிய இடங்களில் கிடைக்கும்

Koviloor Digital Library

மணமகள் தேவை

மாத்தூர் கோவில் உறையூர் பிரிவைச் சேர்ந்த B.Com., ICWAI முடித்து விட்டு C.A இறுதியாண்டு தேர்வு எழுதியுள்ள 26 வயது மணமகனுக்கு, பட்டப் படிப்பு படித்த அழகிய மணமகள் தேவை தொடர்பு கொள்ள கீழ்காணும் முகவரிக்கு எழுதவும்.

பெட்டி எண் 263
C/o " நகரத்தார் குரல்"
108 – 109, நேதாஜி ரோடு
மாடி
மதுரை – 625001

அன்பான வேண்டுகோள்

செட்டிநாட்டில் சுமார் அறுபது அல்லது எழுபது ஆண்டுகட்டு முன்பு எடுக்கப்பெற்ற அறுபதாம் ஆண்டு நிறைவு மணி விழாப்படங்கள், தேசிய தலைவர்கள், தமிழறிஞர்கள், புலவர்-கள், கவிஞர்கள் ஆகியோருடன் நம் நகரத்தார் பெருமக்கள் உள்ள அரிய படங்களை "நகரத்தார் குர"லுக்கு அனுப்பிவைக்க வேண்டுகிறோம். அவ்வாறு வந்து சேரும் படங்களை அனுப்பிவைப்போரின் பெயர், ஊர் விவரங்களுடன் "நகரத்தார்குர"லில் வெளியிட ஏற்பாடு செய்துள்ளோம்.

ஆசிரியர்

Raja

for Nourishing BREAD, Crisp BISCUITS, Delicious CAKES, and Kiddies' Favourites.

Manufacturers:
RAJA BARLEY BISCUIT CO;
(BAKERS & CONFECTIONERS
"CHELLAMUTHU SANGU MALIGAI" Madurai.

ESTD. 1926.

Phone: 747858
746634

Designed by: M.V. Achari Son

Design. Reqd.

ராஜபார்லி

Koviloor Digital Library

அருள்மிகு கற்பக விநாயகர்

- வி. என். சிதம்பரம்



அற்புதக் கீர்த்தி வேண்டின்
ஆனந்த வாழ்க்கை வேண்டின்
நற்பொருள் குவிதல் வேண்டின்
நலமெலாம் பெருக வேண்டின்
கற்பக மூர்த்தி தெய்வக்
களஞ்சியத் திருக்கைச் சென்று
பொற்பதம் பணிந்து பாரீர்
பொய்யில்லை கண்ட உண்மை.

பிள்ளையார்பட்டியில் வீற்றிருக்கும் கற்பக விநாயகர் மிகச்சக்தி வாய்ந்த தெய்வம். நகரக்கோவில் ஒன்பதில் ஒன்று. இது ஒரு குடவரைக்கோயில். 1160 ஆண்டுகளுக்கு முன்பு பாண்டிய மன்னர்களால் நகரத்தார்களுக்கு கொடுக்கப்பட்டது. இதற்குரிய சான்றுகள் இக்கோவிலேயே கல்வெட்டுகளாக இருக்கிறது. கற்பக மூர்த்தியை வடிவமைத்த சிற்பியின் கையெழுத்து. "எக்காட்டூர் கோன் பெருபரணன். (பெருந்தச்சன்) என்று கல்வெட்டிலேயே செதுக்கப்பட்டது. வலம்புரிச் சங்கு போல கற்பக விநாயகரின் தும்பிக்கையும் வலது புறமாக வளைந்திருக்கிறது. வலது கையிலிருக்கும் லிங்கத்தின் பொலிவு நமக்கு ஆனந்தத்தை சுரக்கிறது.

மன்னர்களுக்குப் பின் கோயில்களை கட்டி பாடசாலை அமைத்து சைவத்தை தமிழை வளர்த்தாலும். மன்னர்களுக்கு முடிசூட்டுகிற பொறுப்பு இருந்ததாலும் நகரத்தார்களை மன்னர் பின்னோர் என்று சொல்வதுண்டு, வீட்டில் செட்டாக இருந்த செட்டிப்பிள்ளைகள் ஆலயங்களுக்கு கொட்டிக் கொடுத்து சிறப்புப் பெற்றார்கள். அந்த வகையில் பிள்ளையார்பட்டி டிரஸ்டிகள் மிகச் சிறப்பாக கோயிலை நடத்தி வருகிறார்கள். ஆலயம் முழுதும் சுத்தமாக இருக்கிறது. பலருக்கு விடுதியில் சாப்பாடு போடுகிறார்கள். மருத்துவமனை கட்டி ஏழை எளிய மக்களுக்கு உதவிபுரிகிறார்கள், சுற்றுலாத்தலமாகவும் விளங்குவதால் ஓய்வு விடுதிகள் கட்டியிருக்கிறார்கள் இன்னும் சில வருடங்களில் திருப்பதி, சபரிமலை போல மக்கள் கூடுவார்கள்.

பிள்ளையார்பட்டியில் உள்ள வேதபாடசாலை மிகவும் பிரசித்தி பெற்றது. உலகப்புகழ் பெற்றுள்ளது. அங்கு பயின்ற மாணவர்கள் உலகின் பல்வேறு நாடுகளிலும் உள்ள இந்து ஆலயங்களில் பூஜைக்கு நியமிக்கப்பட்டுள்ளார்கள். தலைமை அர்ச்சகராக இருக்கும் டாக்டர் திரு. பிச்சைக்குருக்கள் அவர்கள் தான் வேதபாடசாலையில் முதல்வர். வேதம் படித்தவர். ஞானம் பெற்றவர். அடக்கம் நிறைந்தவர், ஈகை குணத்தவர். பணத்தை அவர் விரும்புவதில்லை. பணமே அவரை விரும்புகிறது. பிராமணர் என்றாலே சிகப்பு நிறம் தான் நமக்கு நினைவிற்கு

Koviloor Digital Library

வரும். ஆனால் கறுப்பு நிறத்தில் உள்ள கற்பகம் பிள்ளையார் தன் நிறத்திலேயே பிச்சைக்குருக்களைப் படைத்து தனக்கு பணி செய்ய அமர்த்திக் கொண்டாரோ எனறு நான் எண்ணுகிறேன். கோவிலுக்கு வெளியில் பிச்சைக்குருக்கள் நடந்து வந்தால் கற்பக விநாயகர் உற்சவராக வருவது போல் தோற்றமளிக்கும்.

இந்து சமய அறநிலையத்துறை இருக்கிறது. அறங்காவலர்களை அரசு நியமிக்கிறது. பொதுவாக இது போன்ற பதவிகளில் அதிக இறை நம்பிக்கை உள்ளவர்களையே நியமிக்கவேண்டும். ஆட்சியாளர்கள் தத்தம் கட்சியாளர்களையோ அல்லது அவர்களுக்கு வேண்டியவர்களையோ நியமிக்கின்றார்கள். நானும் அப்படி நியமிக்கப்பட்டவர்களில் ஒருவன் தான். தகுதி அடிப்படையில் நியமிக்கப்படாவிட்டால் தூய்மை நேர்மையை எப்படி எதிர்பார்க்க முடியும்.

பிள்ளையார்பட்டி கோவில் நிர்வாகிகள் சிறப்பான சேவை செய்வதால் நிர்வாகம் சீராகத்திகழுகிறது. அதனால் வருகிற மக்களுக்கு எந்த விதமான வசதிவேண்டுமோ அதையெல்லாம் நிர்வாகம் செய்துள்ளது. இங்கு வராத அன்றைய இன்றைய தவைவர்களே கிடையாது. எனச் சொல்லலாம்.

பசும்பொன்தேவர்

மறவர்குல மாணிக்கம் பசும்பொன் கண்ட மாசு மறவற்ற சிங்கம் முத்துராமலிங்கத்தேவர் தன் இறுதிக் காலத்தில் பல மாதங்கள் பிள்ளையார்பட்டி வைத்தியசாலையில் தங்கி மருந்து சாப்பிட்டு தினசரி கற்பக விநாயகரை வணங்கிய காட்சியை நான் பார்த்திருக்கிறேன். மைசூர் மகராஜா ஜெயசாம்சாஜ் உடையார் தமிழ்நாடு கவர்னராக இருந்த போது மன அமைதிக்காக பலமுறை கற்பக விநாயகர் சன்னதிக்கு வந்து வழிபட்டதையும் பார்த்திருக்கிறேன். அவரை வரவேற்ற புகைப்படங்களை இன்னும் நகர விடுதியில் காணலாம். பிள்ளையாரின் சக்தியால் அவரின் அருளால் ஈர்க்கப்பட்டு கூட்டம் அலை அலையாக வந்துசேருகிறது. சென்னையில் படித்தவர், பாமரர், சினிமாக்காரர்கள், அமைச்சர்கள் ஆகியோரின் சட்டைப் பைகளில் அதிகமாய் இருக்கும் படம் கற்பக விநாயகர் படம் தான் ரிக்ஷாவில் கூட வரைந்து வைத்திருக்கிறார்கள் கடல் கடந்த நாடுகளிலும் இதே நிலைதான்.

வாஸ்து பார்ப்பதில் மிகச் சிறந்தவர்கள் நாகேஸ்வரராவ் என்ற ஆந்திராக்காரர். சென்னை தி. நகரில் வசித்துவருகிறார். கரு. முத்து கண்ணன் அவர்கள் தன் குரு என்று சொல்கிற அளவிற்குச் சிறப்புப் பெற்றவர். வீட்டிற்கு வாஸ்து பார்ப்பது போல அந்தக் காலங்களில் கோவில் கட்டும் போதும் வாஸ்து முறைப்படி பார்த்து அமைப்பார்கள் அந்த முறைப்படி சிறப்பாக அமைத்த கோவில் திருப்பதி வெங்கடாஜலபதி கோவில். அதற்கு இணையாக அமைத்த கோவில் பிள்ளையார்பட்டி கோவில் என்று நாகேஸ்வரராவ் சொல்வதைப் பார்த்தால் மகிழ்வாக உள்ளது.

இராம. வீரப்பன்

முன்னாள் அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்கள் பெரியார் ஈ .வே.ரா வின் சீடர் என்னை தமிழகத்திற்கு அறிமுகப்படுத்தி ஆளாக்கிய அவரைப்பற்றி எழுத எனக்குத் தகுதி இல்லை என்றாலும் மனதில்

Koviloor Digital Library

பட்டதை எழுதுகிறேன். இதற்காக அருளாளர் ஆர். எம். வீயார் அவர்களிடம் மன்னிப்புக்கேட்டுக் கொள்கிறேன். காரணம் சாதாரண மரமாக இருந்த என்னை சிற்பமாக செதுக்கியவர். கல்லாகக் கிடந்த என்னை சிலையாக மாற்றியவர் திரு இராம. வீரப்பன். அவர் இல்லையேல் மீனாட்சிக்கு தொண்டு செய்ய அடியேனுக்கு வாய்ப்பேது?

ஒன்பது ஆண்டுகாலம் அன்னை மீனாட்சியின் திருவடியில் கிடக்க முடிந்திருக்குமா?

நகரத்தார்கள் செய்த ஆலயத்திருப்பணிகளை மனதில் நினைத்து ஒரு நகரத்தாரை மீனாட்சி அம்மன் ஆலயத்தில் அறங்காவலராக நியமிக்க வேண்டுமென்று நினைத்தபோது அவருக்குத் தெரிந்த நகரத்தாராகிய எனக்கு அந்தப்பணியை தந்தாரே தவிர தனிப்பட்ட சிதம்பரத்திற்குத் தரவில்லை. நம் சமூகத்திற்குக் கிடைத்த சிறப்பு அது. அது தவிர பழநிக்கோவிலுக்கு கருமுத்து தியாகராஜன் செட்டியார் மனைவி டாக்டர் ராதா தியாகராஜன், சென்னை புரசவாக்கம் கோவிலுக்கு வள்ளல் டாக்டர் அழகப்ப செட்டியார் மகள் உமையாள் ராமநாதன். சேலம் கோவிலுக்கு பூலாங்குறிச்சி சொக்கலிங்கம் செட்டியார். குளித்தலை கோவிலுக்கு ராயவரம் AR. அருணாசலம் செட்டியார் இப்படி இன்னும் பலரை நியமித்து நகரத்தாருக்கு சிறப்புச் செய்தார்.

திரு. இராம. வீரப்பன் அவர்கள் காலம் அறநிலையத்துறைக்கு ஒரு பொற்காலம். பல ஆலயங்களில் குடமுழுக்கு விழாக்கள் அவரது முயற்சியால் நடந்தது. நிர்வாகத்தில் கர்மவீரர் காமராஜருக்கு இணையானவர்கள் என்பதால் தானோ என்னவோ இருவரது இல்லமும் இருந்தது - இருப்பது திருமலைப்பிள்ளை வீதி. விதி மட்டும் ஒன்றானதல்ல வீதியும் தான். தூங்காது பணிபுரியும் ஆற்றல் மிக்கவர். இரவு 11 மணிக்கு தொலைபேசி மூலம் என்னிடம் மீனாட்சி கோவிலின் குத்தகையைப் பற்றி கேட்பார். இரவு 11 மணி என்பது எனக்கு தூங்கும் நேரம் அனால் அவருக்கோ பைல் பார்க்கும் நேரம். கேட்கும் விபரம் தெரிந்தால் பதில் சொல்வேன் இல்லையேல் நாளை கோவிலுக்குச் சென்று பதில் சொல்கிறேன் என்று சொல்வேன். காரணம் எதையும் சொல்லி அவரிடம் தப்பிக்க முடியாது. தேர்ந்த வழக்கறிஞரைப் போல அடுத்தடுத்து கேள்வி வரும். இதை ஏன் சொல்கிறேன் என்றால் அப்போதெல்லாம் இறை உணர்வோடு காரியங்களை அவர் ஆற்றினார் என்று சொல்லமாட்டேன். தான் ஏற்றுக்கொண்ட பொறுப்பில் தன் சொந்த விருப்பு வெறுப்புகளை திணிக்காமல் கடமையைச் செய்யவேண்டும் என்ற எண்ணம் என்று தான் சொல்லவேண்டும். அவரே பொதுமேடைகளில் சொல்லுவார். சிறுவயதில் ஆலயங்களில் விபூதி குடுத்தால் கீழே கொட்டிவிட்டு T.K. சண்முகம் அவர்களிடம் தண்டனை பெற்றறேன் ஒன்று. ஆனால் அறநிலையத்துறை அமைச்சரான பிறகு கோவிலுக்கு வந்து சன்னதியில் நின்று சிவாச்சாரியார் விபூதி பிரசாதம் கொடுத்தால் வாங்கி அருகிலிருக்கிற எங்களிடம் கொடுத்துவிடுவார்.

புதுக்கோட்டைக்கு பக்கத்திலுள்ள அவரது சொந்த ஊரான வல்லத்திரா கோட்டையில் அவருக்கு மணிவிழா எளிமையாக நடந்தது. மணிவிழாவிற்கு திருச்சியிலிருந்து வந்த யானை எதிர்பாராத விதமாக கீரனூர் அருகே இறந்து விட்டது. மிகவும் வருந்தினார். அது கூட வனத்துறை அமைச்சராக இருந்ததால்

Koviloor Digital Library

மிருகங்களிடத்திலும் செலுத்திய அன்பின் வெளிப்பாடாகக்கூட இருக்கும் என நம்புகிறேன். இந்த கட்டத்தில் வலையபட்டி பாலன் என்ற ஜோசியர் சொன்ன கருத்து ஏற்கப்பட்டு. யானை விநாயகப்பெருமான் தான். பிள்ளையார்பட்டிக்குச் சென்று வழிபாடு நடத்துவது நல்லது என்று சொல்ல பிள்ளையார்பட்டிக்குச் சென்று கற்பக விநாயகரை தரிசித்து கணபதி ஹோமமும் நடத்தி கீரனூர் அருகில் யானை இறந்த இடத்தில் ஒரு பிள்ளையார் கோவிலையும் கட்டிவிட்டார் இன்று அவரது படுக்கை அறையில் கூட கற்பக விநாயகர் காட்சி அளிக்கின்றதைப் பார்த்தால் மெய் சிலிர்க்கிறது. பெரியாரின் சீடரை யானை வடிவில் வந்து ஆட்கொண்டார் கற்பக விநாயகர் என்று நினைக்கும் போது மனது மகிழ்ச்சியடைகிறது.

க. ராசாராம்

அடுத்ததாக முன்னாள் அமைச்சர் மாண்புமிகு க. ராசாராம் அவர்கள். இவர்களும் பெரியாரின் சீடர். இவர்களைப் பற்றி எனக்கு தகுதியில்லை. என்னை தன் பிள்ளையைப் போல நடத்துவதால் அந்த உரிமையில் மன்னிப்புக்கேட்டு எழுதியும். அவர்கள் தனிப்பட்ட முறையில் எனக்கு எழுதிய கடிதத்தை வெளியிடவும் செய்கிறேன்.

சேலத்தில் கஸ்தூரிப்பிள்ளை குடும்பம் பாரம்பரிய மிக்க குடும்பம் . பல பேருந்துகளுக்குச் சொந்தக்காரர் வசதி மிக்கவர் 82 வயது வரை டென்னிஸ் விளையாடியவர். மிகவும் பிரபலமானவர். அன்னாரின் மகனாக பிறந்த பெருமை பெற்றவர் ராசாராம் அவர்கள். 50 ஆண்டுகளுக்கு முன் பெரியார் ஈ.வே.ரா. மலேசியாவிற்குப் போகும் போது கஸ்தூரிபிள்ளையிடம் உங்கள் பிள்ளைகளில் எங்கள் இயக்கத்திற்கு ஒருவரைத் தாருங்கள் என்றபோது ராசாராமை கூட்டி போங்கள் என்று ஒப்பிக்கவே; ராசாராம் அவர்களின் அரசியல் வாழ்வு ஆரம்பமானது. பிறகு பேரறிஞர் அண்ணாவின் செல்லப்பிள்ளையாக இருந்து, அவர் உடல் நலமுற்று அமெரிக்கா சென்றபோது நம்பிக்கைக்கு உரியவராக அமெரிக்கா சென்று வந்தார். பாராளுமன்ற உறுப்பினர், அமைச்சர், சபாநாயகர் என்ற பல பொறுப்புக்களை ஏற்று பதவிக்குப் பெருமை தேடித்தந்தார்கள். அரசியலிலேயே சொந்தப் பணத்தை கரைத்தவர், அனைவரிடமும் அன்பு காட்டி உண்மையே பேசி வருவதால் மாற்றுக் காட்சிக்காரர்களும் மரியாதை செலுத்தக்கூடிய ஒரே அரசியல்வாதி திரு. ராசாராம் தான். எனக்கும் அவருக்கும் 25 ஆண்டுகளாக நட்பு உண்டு. மதுரைக்கு வந்தால். அமைச்சராக இருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி எங்கள் இல்லத்துக்கு வந்து உரிமையோடு ஒரு காப்பி சாப்பிட்டு விட்டு சமையல்காரரை கூட மறக்காமல் நலம் விசாரிப்பது, அவரது பெருந்தன்மைக்குச் சான்றாகும். செல்வி ஜெயலலிதா அமைச்சரவையில் பொறுப்பேற்றுக் கொண்டு முதன் முறையாக மதுரை புகைவண்டி நிலையத்தில் வந்து இறங்கும் போது பெருங்கூட்டம் நானும் முண்டி அடித்துக்கொண்டு ஒரு

இராமு : *உங்கள் கம்பெனி மானேஜர் முன்பெல்லாம் கோபத்தில் தண்ணியில்லாக் காட்டுக்கு உன்னை மாற்றி விடுவேன்னு திட்டுவாரே இப்ப எப்படி?*

சோமு : *இப்ப கோபம் வந்தா "கோயமுத்தூருக்கு மாற்றிடுவேன்னு தான் திட்டுறாரு.*

- RM. V. ராமசாமி - திருச்சி

Koviloor Digital Library



முன்னாள் சபாநாயகர் திரு. க ராசாராம் அவர்கள் பிளைையார்பட்டி ஆலயத்திற்கு வருகைதந்த போது



அருள்மிகு மீனாட்சி ஆலயத்திற்கு அப்போதைய அமைச்சர் இராம. வீரான் அவர்கள் வந்தபோது.

Koviloor Digital Library

மாலையைப் போட்டு விட்டு வந்துவிட்டேன். சர்க்கியூட் ஹவுசிலிருந்து ஒரு போன் வந்தது. "அமைச்சர் உங்கள் வீட்டுக்கு வருகிறார் 2 சப்பாத்தி மட்டும் தயார் செய்யச் சொன்னார்" என்று அமைச்சரின் உதவியாளர் சொன்னார் அமைச்சருக்காக பலகாரத்தை வைத்துக்கொண்டு பலர் காத்திருக்க. தன் குடும்பத்தில் ஒருவனாக என்னைக் கருதி எங்கள் இல்லத்திற்கு வந்தது, அவரின் அன்பைப் பிரதிபலித்தது. எங்கள் குடும்ப நிகழ்ச்சிகளில் தவறாது கலந்து கொள்வதும் என் நெஞ்சத்தை விட்டு நீங்காதவை. அப்படிப்பட்டி எங்கள் குடும்ப பெரியவராகிய திரு. க. ராசாராம் அவர்களை கற்பக விநாயகர் எப்படி ஆட்கொண்டார் என்பதை அவர் எழுதிய கடிதத்தை வைத்தே அறிவதற்காக அதை வெளியிட்டு மகிழ்ச்சி அடைவதோடு 100 ஆண்டுகள் நோய் நொடியின்றி வாழவைக்க கற்பக பிள்ளையாரை தாழ்பணிந்து வேண்டுகிறேன். கடந்த 7.5.98 அன்று திரு. க. ராஜராம் அவர்கள் பிள்ளையார் பட்டி ஆலயத்திற்கு வந்திருந்து கணபதி ஹோமம் மற்றும் பூசை செய்து வழிபட்டார்.

K. RAJARAM, B.A.
Former Minister

Offi : 8523420
Tel. Resi : 4940795
4941837

51, Santhome High Road,
Madras - 600 028.

Date : 9. 5. 98

உயர்திரு. V. N. சிதம்பரம் அவர்கள்.
உரிமையாளர் கற்பகவிநாயகர்.

பேரன் புடையீர்.
வணக்கம். நான். நலமுடன்
கடந்த 7.5.98 வியாழக்கிழமை, என் வாழ்வில்
ஒரு மறக்க முடியாத நாளாகும். அதுவரை உங்கள்
சென்னையில் விநாயகர் சிலையை திறந்து
வைத்து கொண்ட நான், பிள்ளையார்பட்டி
விநாயகர் கோயிலில், கணபதி ஹோமம்
செய்வேன் என்று கனவிலும் கருதவில்லை.
நாங்கள் மதுரையை மீனாட்சி
கோயில் தீக்கிரையான சமயத்தில் தான்
அங்கே குடும்பத்துடன் தெரிவிக்கிறபடியே
நான் வாய்ப்பினையும் பெற்றேன். பழுது காரணமாக
குன்றக்குடியுடன் மதுரை மீனாட்சி கோயிலுக்கு
செல்ல நேரிட்டு, என் மகிழுந்து அன்பினால்,
ஒரு வெள்ளியினால் பிள்ளையாரையும்
பிள்ளையாரை சுற்றிலும் அன்புடன்
தந்து, அதை என் வீட்டிலேயே
வைத்திருக்கச் சொன்னார்கள். இனிமேல்
என் உடல் நலம் குன்றாமல் இருக்கவேண்டும்.

Koviloor Digital Library

K. RAJARAM, B.A.
Former Minister

61, Santhome High Road,
Madras - 600 028.

Off. : 8523420
Tel. Res. : 4940795
4941587

61, Santhome High Road,
Madras - 600 028.

Date

Date :

Koviloor Digital Library

"உரு" ஏறத் "திரு" ஏறும்"

பேட்டரியை சார்ஜ் செய்வது போலத் தெய்வீக சக்தியை, வேதம் படிக்கிற மாணவர்களாலும் வேத விற்பன்னர்களாலும் தினம் முழக்கப்பட்டு வருவதால் பிள்ளையார்பட்டி ஆலயத்திற்கு எத்தனை ஆயிரம் பேர் வந்து, எவ்வளவு வரங்களைக் கேட்டாலும் உடனுக்குடன் அருள் பாலிக்கப் படுகிறது.

வலம்புரித்துதிக்கை

பிள்ளையார்பட்டி விநாயகரின் தும்பிக்கை வலப்புறமாக வளைந்திருப்பதும் தனிச்சிறப்பாகும், வலம்புரிச் சங்கு போல, வலம்புரித் துதிக்கையும் தனித்தன்மை வாய்ந்தது, அதிலும் குறிப்பாக வடக்குத் திசையை நோக்கியிருக்கும் வலம்புரி விநாயகர் இவர் மட்டுமே, இப்படிப்பட்ட வலம்புரி விநாயகரை வணங்குபவர்களுக்கு வெற்றி மேல் வெற்றிதான்

யோக விநாயகர்

கற்பக விநாயகர், தனது வலது கையில் மோதகத்தை வைத்திருக்கவில்லை யோக நிலையில், உலக நன்மைகளாகக் கையில் லிங்கத்தை வைத்து ஞானத்தவம் புரியும் (தியானம் செய்யும்) திருக்கோலத்தில், அமர்ந்த நிலையில் காணப்படுகிறார். அவர் யோக விநாயகராக இருப்பதால், கேட்ட வரங்களெல்லாம் எளிதில் கிடைக்கின்றன.

அதிசய ஒலி

ஆலயத்திலுள்ள நடராஜன் செப்புத் திருமேனியில் ஒரு அதிசயம் உள்ளது. அச்சிற்பத்திலுள்ள செம்பினால் ஆன டமாரத்தைச் தட்டினால், உண்மையான டமாரத்தின் ஒலியே கேட்கிறது.

அற்புதம் நிறைந்த கற்பக மூர்த்தி

முதல் பிள்ளையார்

மனித உடற்கூற்று அடிப்படையில் இரண்டு கைகளோடு அமைந்திருந்த இயக்கன் சிற்பத்தில், ஓம்கார சொரூபமாக யானையின் தலையைப் பொருத்தியதாலேயே, உலகின் முதல் பிள்ளையாருக்கு மட்டும் இரண்டே கைகள் இருக்கின்றன. இத்தெய்வீகச் சிற்பக்கலை வரலற்றின் மூலமும், நமது கல்வெட்டுக்களின் சான்றாதாரங்களின் மூலமும் பிள்ளையார்பட்டிக் கற்பக விநாயகரின் சிற்பமே உலகத்திற்கு முதல் பிள்ளையார் வடிவம் என்பதை உறுதியாகக் கூறலாம்.

நாகநாதர்

பிள்ளையார்பட்டி ஆலயத்தில் உள்ள பக்பதி லிங்கத்தை அடுத்து "நாகநாதர்" சிற்பம் உள்ளது. ஐந்து தலை நாகத்தின் கழுத்துப் பகுதியில் ஒரு சிவலிங்கம் உள்ளது. உயிர்கள், ஐம்புலன்களின் ஒடுக்கத்தாலேயே இறைவனைக் காண முடியும் என்ற தத்துவத்தின் விளக்கமாக இச்சிற்பம் அமைந்தள்ளது.

செவ்வாய் தோஷம் விலகிட

திருமணப பேறு நல்கும் காத்யாயினி அம்மனின் சிற்பம் இங்கு மட்டுமே (பிள்ளையார்பட்டியில்) உள்ளது. செவ்வாய் தோஷம் முதலிய பல்வேறு தடைகளால் தள்ளிப்போடும் திருமணப்பேறு இந்த அம்மனைத் தரிசிப்பதால் விரைவில் கிடைக்கும் மேற்று நோக்கியிருக்கும் உயிரவர் சன்னதிக்கு எதிரே, தெற்கு நோக்கியதாகக் காத்யாயினியின் சிற்பம் உள்ளது.

Koviloor Digital Library

மதுரையில்
மாபெரும் பாத்திரக் கடை

அன்புடன் அழைக்கும்

ஆனந்தா T. அமிர்தம்

தரமான
செட்டிநாடு
சீர் பாத்திரங்கள்
விற்பனை
செய்வதில் தனிச்
சிறப்பு.

- எவர்சில்வர்
- அலுமினியப் பாத்திரங்கள்
- பிரஷர் குக்கர்கள்
- பிளாஸ்டிக் சாமான்கள்
- மிக்ஸிகள்
- கிரைண்டர்கள்
- பிளாஸ்குகள்
- ஹாட்பேக் & மெல்மோவேர்
- கேஸ் ஸ்டவ்கள்
- திரி ஸ்டவ்கள்
- அயர்ன் பாக்ஸ்கள்
- Electric Rice Cookers
- Non-Stick குக்வேர்கள்
- காபி மேக்கர்கள்
- சோடா மேக்கர்கள்
- எலக்ட்ரிக் கேக் ஓவன்கள்
- வாட்டர் பில்டர்கள்
- பரிசுப் பொருட்கள்

தரமான பொருட்களை நியாயமான விலையில் விற்பனை செய்து
மக்களின் நன்மதிப்பைப் பெற்ற ஸ்தாபனம்

போன்: 620891 & 620576

ஆனந்தா மெட்டல் கம்பெனி பர்ம்

எவர்சில்வர், அலுமினியப் பாத்திர வியாபாரம்
43-A & 57, காமராஜர் சாலை, கீழவாசல், மதுரை-9.

Koviloor Digital Library

சொல்லக்கூடாததை சொல்லுவது தவறு

சில நேரங்களில் சில பேர் தேவையில்லாமல் பேசி காரியத்தைக் கெடுப்பது, தனக்குத்தான் எல்லாம் தெரியும் என நினைத்து எதையாவது பிதற்றிக் காரியத்தைக் கெடுப்பது, சில பேருக்கு சாதராண செயலாக இருக்கிறது. இப்படித்தான் ஒரு திருமண நிச்சயத்தார்த்தம் வீட்டில் நடந்தது. இருவீட்டாருக்கும் சம்மதம் பெண்ணுக்கு மாப்பிள்ளையையும். மாப்பிள்ளைக்கு பெண்ணையும் பிடித்து விட்டது. தாம்பாலம் மாற்றுகிற வேளைவந்தது. மணமகள் காரைக்குடி. மணமகள் மாயவரம் பல ஊர்களிலிருந்து வந்திருந்த உறவினர்களில் பெண்ணின் தாய்மாமன் மணமகனின் தந்தையைப் பார்த்து பேசத் தொடங்கினார்.

உறவினர் : என்ன அண்ணே என்னைத் தெரியுதா? (பெண்ணின் தாய்மாமா)

மண. தந்தை : தெரியலியே நீங்க யாரு?

உறவினர் : என்னங்க! நல்லாபாருங்க! ஞாபகமில்லையா?

மண. தந்தை : இல்லையே ஞாபகமில்லையே

உறவினர் : ஒரு 20 வருஷத்துக்கு முன்னே மாயவரம் கோர்ட்டுல ஒரு கேசு..

மண. தந்தை : ஆமாம் மாயவரம் கோர்ட்டுல ஒரு கேசு

உறவினர் : அந்தக் கேகல ஒரு சாட்சி சொன்னனே அது நான் தான் சொன்னேன், இப்பவாவது என்னைத் தெரியுதா?

மண.தந்தை : அடப்பாவி நீ தானா அது. என் குடும்பமே உன்னால தானே நீ சொன்ன பொய் சாட்சியினால் தானே அழிஞ்சு போச்சு இந்தப் பொண்ணு உனக்கு தங்கச்சி மகளா? அம்மாடி இந்தக் குடும்பமே வேண்டாம் சம்மந்தமே வேண்டாம்,

என்று சொல்லி எழுந்து குடும்பத்தோடு வெளியே போய்விட்டார் திருமண நிச்சயமே நின்று போனது. இப்படி தேவையில்லாத நேரத்தில் பேசி ஒரு நல்ல நிகழ்ச்சியை கெடுத்தது தேவைதானா?..... சொல்லக்கூடாததை. சொல்லுவது தவறுதானே.

ஒரு முறை கவிஞர் வாலியைப் பார்த்து ஒரு பெரிய தமிழறிஞர் தேவையில்லாமல் ஒரு கேள்வி கேட்டு மாட்டிக்கொண்டார். தமிழறிஞர் இன்று உயிரோடு இல்லை என்பதால் பெயர் போடாமல் எழுதுகிறேன்.

தமிழறிஞர் கேட்டார் "என்னய்யா உங்க பெயரை வாலின்னு வச்சிருக்கீங்க அதுக்கு என்ன அர்த்தம்" என்றார். அதற்கு உடனே வாலி "அது ஒண்ணுமில்லையா இராமாயண வாலிக்கு எதிரே வரக்கூடியவரின் வீரத்தில் பாதி அவனுக்கு வந்துவிடுவது போல. எனக்கு முன் வருகிற தமிழறிஞர்களின் தமிழ் அறிவில் பாதி நமக்கு வராதா என்பதற்கு இப்படி பெயர் வைத்துள்ளேன்" என்றார் நகைச்சுவையாக. அத்துடனாவது விட்டுவிடாத தமிழறிஞர் மீண்டும் ஒரு கேள்வி கேட்டார் "ஆமா வாலி" உங்களைப் பார்த்தா இதுவரை யாருடைய தமிழறிவும் உங்களுக்கு வந்து சேர்ந்ததா தெரியலையே" என்றார். வாலி சொன்னார் சிரித்துக் கொண்டே "நான் இதுவரை எந்த சிறந்த தமிழறிஞரையும் சந்திக்கவில்லையே" என்றார். தமிழறிஞரின் முகம் பேயரைந்தது போலாகியது தேவையில்லாமல் கேள்வி கேட்டோமே என நொந்து கொண்டார். எனவே தான் சொல்லக்கூடாதை சொல்லுவது தவறு என்று பெரியவர்கள் சொல்வார்கள்.

கவிஞர் அப்பச்சி சபாபதி

Koviloor Digital Library

தஞ்சைக்குப் பெருமையளிப்பது
பெரிய கோவில்!

தாம்பூலத்திற்குச் சிறப்புச் சேர்ப்பது
"லெட்சுமி சீவல்"

கலப்படமற்ற தரமான
கொட்டைப் பாக்கில் தயாராவது

Koviloor Digital Library

அணைப்பட்டி ஆஞ்சனேயர் கோவில்

மதுரையை ஆட்சிபுரிந்த ராணிமங்கம்மாள் நிர்மாணித்த வீர ஆஞ்சநேயர் கோவில் அணைப்பட்டியில் உள்ளது. மதுரையிலிருந்து 57 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள இக்கோவிலுக்குச் செல்ல முதலில் நிலக்கோட்டைக்குச் செல்ல வேண்டும். அங்கிருந்து 10 கிலோமீட்டர் தொலைவில் அணைப்பட்டி அமைந்துள்ளது

அணைப்பட்டி வீர ஆஞ்சநேயர் கோவில் வரலாறு இதோ:-

16 ஆம் நூற்றண்டில் வைகை ஆற்றில் அவ்வப்போது ஏற்பட்ட வெள்ளம் அணைப்பட்டி வட்டார ஊர்களை அழித்துவரவே வெள்ளத்தைத் தடுக்க பலமுறை அணைபோட்டும் அது பயனில்லாமல் போயிற்றாம். அப்போது மதுரை அரசி ராணிமங்கம்மாளிடம் இது பற்றி மக்கள் முறையிடவே ராணிமங்கம்மாள் சித்ராபௌர்ணமியன்று அணைப்பட்டிப் பகுதியில் முகாமிட்டிருக்கிறார். பௌர்ணமி இரவில் ஆஞ்ச நேயர் ராணியின் கனவில் தோன்றி வைகை ஆற்றின் தாழம்பூ புதர்களில் தாம் குடிகொண்டிருப்பதாகவும். இதைக்கண்டு கொள்ளாமல் மக்கள் அணை போட்டு வெட்டுவதர்கவும் தம்மை எடுத்து கோயிலில் வைத்துக் கும்பிட்டால் வெள்ளத்திலிருந்து அழிவு ஏற்படாது அணை நிலைத்து நிற்கும் என்றும் கூறியிருக்கிறார். இதன் படி அடுத்தநாள் அரண்மனைச் சேவகர்கள் வைகை ஆற்றில் எல்லா இடங்களிலும் தேடி ஒரு தாழம்பூபுதரில் இருந்து செங்குத்தான பாறையைக் கண்டுபிடிந்துள்ளனர். இதை ராணியிடம் தெரிவிக்கவே அந்தப்பாறையிலேயே அனுமாரை வடித்து அவருக்கு ஆற்றங்கரையிலேயே ஒரு கர்ப்பக்கிரகத்தையும் ஏற்படுத்தினர். அதுவே இப்போது அணைப்பட்டி அனுமார் ஆகும்.. இந்த அனுமார் வைகை ஆற்றங்கரையில் தென்னைமரச் சோலைகளுக்குக்கிடையே எழுந்தருளியிருக்கிறார். இவருடைய ஒரு பார்வை இலங்கையிலும் இன்னொரு பார்வை அயோத்தியிலும் இருப்பதாகவும் ஐதீகம். கோவில் அருகே பேரணையும் மகாலிங்கம் மலையும் உள்ளன. ஆடி அமாவாசை, சித்திரா பௌர்ணமி. மார்கழி அமாவாசை இங்கு விசேஷம். சனிக்கிழமைகளில் பெரும் கூட்டம் வருகிறது. காலை 6 மணியிலிருந்து மாலை 6 மணி வரை கோவில் திறந்திருக்கும். சனிக்கிழமைகளில் காலை 6 மணி முதல் இரவு 8 மணி வரை அனுமாரைத் தரிசிக்கலாம்.

திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டையிலிருந்து அணைப்பட்டி செல்ல பஸ் வசதியும், வேன் வண்டி வசதியும் உள்ளது.

நிலக்கோட்டை அணைப்பட்டிப் பகுதிகளில் சுற்றுப்பயணம் செய்த "நகரத்தார் குரல்" சிறப்புப்பிரதிநிதி திரு. அ. வல்லநாட்டனை நிலக்கோட்டையில் சொர்ணமகால் திரு. திருநாவுக்கரசு செட்டியாரும். சொர்ணமகால் சுந்தரம் செட்டியாரும் வரவேற்றனர்.

அணைப்பட்டியில் திரு வல்லநாட்டானை அஞ்சி நேயர் கோவில் அர்ச்சகர் திரு எஸ். விஜயராகவன் எம். காம். வரவேற்று கோவில் வரலாற்றை விளக்கினர். 30.5.98 அன்று அணைப்பட்டி சென்றபோது ஆஞ்சநேயர் கோவில் இருந்த பகுதி மிகவும் குளிர்ச்சியாக இருந்தது அன்று மதுரை சிவகங்கை. திண்டுக்கல் மாவட்டப் பகுதிகளில் சுட்டெரிக்கும் வெயிலின் அளவு 110. டிகிரியாய் இருந்தது.

Koviloor Digital Library

அறிவிப்பு

மருத்துவப் படிப்பு, பொறியியல் படிப்பு, பி. டெக். எம். காம். எம். எஸ்ஸி, எம் ஏ, எம். பி. ஏ. பி. காம், பி. எஸ்ஸி, பி.ஏ. பாலிடெக்னிக் படிப்பற்கு மாணவர்களின் கல்விக்கு திருப்பிச்செலுத்தும் நிதி உதவியாகவும். மாணவிகளுக்கு மருத்துவப் படிப்பு, பொறியியல், பி. டெக் படிப்புகளுக்கு திருப்பிச் செலுத்தும் நிதி உதவியாகவும், மற்ற பட்டப்படிப்புகளான எம். பி. ஏ. எம் காம், எம். எஸ்ஸி எம். ஏ. பி. காம், பி. எஸ்ஸி, பி.ஏ. பாலிடெக்னிக், ஆசிரியர் பயிற்சி படிப்பு களுக்கு நன்கொண்டயாகவும் நிதி வழங்கப்பட இருக்கிறது. 1998 -99ம் ஆண்டிற்கு கல்வி உதவி வேண்டுவோர் கீழ்காணும் முகவரிக்கு விண்ணப்பித்து கல்வி உதவி விண்ணப்பபாரம் பெற்றுக் கொள்ளலாம் என சென்னை நகரத்தார் ஐக்கிய சங்கம் அறிவித்துள்ளது.

செயலாளர், நகரத்தார் ஐக்கிய சங்கம்,
88, பவளக்காரத்தெரு,
சென்னை – 600001

நிதி உதவி

"பிளஸ் டு" தேர்வில் மாநில அளவில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவர் ஒருவருக்கும், மாணவி ஒருவருக்கும் டாக்டர் எம். ஏ. எம். இராமசாமி அவர்கள், அவர்களுடைய அறக்கட்டளையிலிருந்து ஆண்டு ஒன்றுக்கு ரூ. 5000 வீதம் மாணவரது பட்டப்படிப்பு முடியும் வரை இலவச நிதி உதவி வழங்க இருக்கிறார்கள். மாணவ மாணவியர் தங்கள் மதிப்பெண் பட்டியல் நகல், இவ்வாண்டு கல்லூரியில் படித்து வருவதற்கான அத்தாட்சிக்கடிதம் தங்கள் ஊர், கோவில் – பிரிவு முதலியவற்றை நிறைவு செய்து கீழ் காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம் என அறிவித்துள்ளனர்.

செயலாளர்
நகரத்தார் ஐக்கிய சங்கம்
88, பவளக்காரத் தெரு
சென்னை – 600001

நோட்டுப் புத்தகம் வழங்கும் விழா

மதுரை கவியரசு கண்ணதாசன் நற்பணி மன்றத்தில் சார்பில் 11–6–98 அன்று நோட்டும் புத்தகம் வழங்கும் விழா நடைபெற்றது தலைவர் திரு. ஆர் சொக்கலிங்கம் தலைமை ஏற்க, பி. சந்திரன் வரவேற்க, காவல் துறை உயர் அதிகாரி திருமிகு ஆ. கணேசன் IPS அவர்கள் நோட்டும் புத்தகம் வழங்கி சிறப்புரை ஆற்றினார்கள் திரு. மு. புகழேந்தி வாழ்த்துரைக்க, கவிஞர் சி. வீரபாண்டிய தென்னவன் நன்றியுரை செய்தார்கள். 15–6–98 அன்று மதுரை குஜராத்தி சமாஜத்தில் திரு. RM.M. அண்ணாமலை அவர்கள் நோட்டுப் புத்தகம் வழங்கி சிறப்புரை செய்தார்கள் கண்ணன் வாழ்த்துரைக்க, கவிஞர் மு. முருகேசன் நன்றி கூறினார்கள்.

நலமாய் வாழ நலவேடுகள்

மகப் பேரின்மை, பாலியல், மறைமுகப் பிரச்சினைகள் நூல்கள் By இருமுறை அரசு விருதும் சர்வதேச விருதுகளும் காங்கிரஸ் விருதும் பெற்ற



Dr. N.N. கண்ணப்பன்

நலவாழ்வு ஆலோசகர்
தமிழ் மாநிலக் காங்கிரஸ் புரவலர்:
தேசீயப் பார்வையற்றோர் சங்கம். Ex.
இளைஞர் காங்கிரஸ் & டாக்டர்கள்
சங்கச் செயலாளர் & அமைப்பாளர்

பாலமுருகன்
பாலியல் ஆஸ்பத்திரி
95 வடக்கு வெளி வீதி (மாடி)
சிம்மக்கல் பஸ் ஸ்டாப், மதுரை – 1

Koviloor Digital Library

சொல்ல வேண்டியதை சொல்லாமல் இருப்பது தவறு

பிள்ளையார்பட்டி கற்பக விநாயகர் ஆலய வழிபாட்டுக்குச் சென்ற போது அங்குள்ள வேதபாடசாலை மாணவர்கள் சிலரைச் சந்தித்து உரையாடினேன். அம்மாணவர்கள் பேசிய விதத்திலிருந்து டாக்டர் பிச்சைக்குருக்கள் எப்படிப்பட்ட சிந்தனையாளர், பண்பாளர், தயாள குணமானவர்கள் என்பது தெளிவாய் அறிய முடிந்தது. ஒரு மாணவர் என்னிடம் சொன்னார். "சார் என் குடும்பம் மிகச்சாதரணக் குடும்பம் நான் ஐந்தாம் ஆண்டு படிக்கிறேன். படிக்கும் போது என்னை ஒரு கோவில் அர்ச்சகர் பணிக்கு ஆசிரியர் அனுப்பிவைத்தார். (ஆசிரியர் என்பது

டாக்டர் பிச்சைக்குருக்கள் தான்) நானும் அந்தக் கிராமம் சென்று அங்குள்ள சிவாலயத்தில் 4 மாதம் அர்ச்சகர் பணி செய்தேன். அங்குள்ள போது எனக்குக் கிடைத்த தட்டுப்பணம் விஷேச பூஜைக்காக கிடைத்த பணம், மாதச் சம்பளம் ஆகியவற்றில் மொத்தமாய் வந்த பணம் ரூ. 12000 ஐ எடுத்த வந்து ஆசிரியரிடம் கொடுத்தேன். முறைப்படி மாணவர்கள் சம்பாதிக்கும் பணத்தை (படிக்கும் காலங்களில்) பாடசாலையில் சேர்ப்பதே சரி. ஆனால் எங்கள் ஆசிரியர் அந்தப்பணத்தை வாங்கிக் கொள்ளாமல், வேண்டாம் தம்பி " நீ இந்த பணத்தை வீட்டுல கொண்டுபோய் கொடுத்திட்டுவா" என்றதோடு வீட்டுக்கு நான் சென்று வர வழிச்செலவுக்காக தன் கைக்காசு 200/- ஐ எனக்கு தந்து அனுப்பியபோது என் கண்ணில் நீர் பிறந்தது. குருவின் எண்ணம் நெஞ்சில் உண்மையை சத்தியத்தை வளர்த்து ஒவ்வொரு மாணவனையும் தன் பிள்ளையைப் போல எண்ணுகிற எங்கள் ஆசிரியரின் குணமே. எங்களை இங்கு எந்தக் கவலையும் கொள்ளாது ஆழமாய் படிக்க வைக்கிறது" என்றார்.

இன்னொரு மாணவர் சொன்னார். "சார் ஆசிரியர் வடிவில் கடவுளை, தாயைத் தந்தையை பார்க்கிறோம் எங்கள் முகம் லேசாக வாடினால் கூட தாங்காட்டார். "வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடிய வள்ளலாரின் மறு உருவே எங்கள் ஆசிரியர்" வேண்டிய போதும், நாங்கள் வெளி நிகழ்ச்சிகளான கும்பாபிஷேகங்கள் செய்விக்கப் போகிறபோதும் தாராளமாய் எங்களுக்கு செலவுக்கு பணம் தருவதும், நிகழ்ச்சி முடிந்து எங்களுக்கு தரும் பணத்தைக் கூட எங்களையே வைத்துக்கொள்ளச் சொல்வது எங்கள் ஆசிரியரின் தயாள சிந்தனைக்கு சில சான்று.

இப்படியே பல மாணவர்கள் தங்களின் தெய்வமாகவே எண்ணுகிற டாக்டர் பிச்சைக்குருக்கள் அவர்களைப் பற்றி எழுதுவதையே பேரின்பமாக கருதுகிறேன். இப்படிப்பட்ட சொல்லவேண்டிய நல்ல செய்திகளை சொல்லாமல் இருப்பது தவறுதானே!.

கவிஞர் அப்பச்சி சபாபதி

Koviloor Digital Library

ஸ்ரீ விசாலம் சிட் பண்ட் லிமிடெட்

தொடக்கம்: 1947

பதிவு அலுவலகம்:
திருநெல்வேலி – 627 006
தொலைபேசி : 333474

நிர்வாக அலுவலகம்:
பள்ளத்தூர் – 630 107
தொலைபேசி: 83477
& 83491

மத்திய அலுவலகம்
161, அண்ணா சாலை,
சென்னை – 600 002.
தொலைபேசி: 8523386 & 8525344

தென்னகத்தில் மக்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமான ஒப்பற்ற சீட்டு நிறுவனம் 50 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ந்து நிறைவான சேவை

மூன்று மாநிலங்களில் 60 அலுவலகங்களோடு ரூ. 55.00 கோடிக்கு மேலாக சீட்டு நடைமுறை நிதியைக் கொண்டு
ரூ. 20,000/- முதல்
ரூ.10,00,000/- வரை
மதிப்புள்ள சீட்டுக்களை சிறந்த முறையில் நடத்தி வருகின்றோம்.

நிதி நிலைமை 31.3.97ல் உள்ளபடி
(தணிக்கை செய்யப்பெற்றது)

அதிகாரம் பெற்ற மூலதனம் ரூ. 25.00 லட்சம்
செலுத்தப்பட்ட மூலதனமும் ரிசர்வ் நிதியும் ரூ. 66.99 லட்சம்
ஆஸ்திகள் ரூ. 43.98 கோடி
சீட்டு நடைமுறை நிதிரூ. 55.56 கோடி

உங்களின் வளர்ச்சியே எங்களின் குறிக்கோள்

டாக்டர் எல்.ஆர்எம். அருணாசலம் M.E.,
பொதுஜன தொடர்பு அதிகாரி

ஏஆர். பழனியப்பன்
நிர்வாக அதிகாரி

அரு. மீனாட்சி
சித. நடராஜன்
இயக்குநர்கள்

ஏஆர். விஸ்வநாதன்
நிர்வாக இயக்குநர்

Grow with Sree Visalam

Koviloor Digital Library

தல விருட்சம்

பிள்ளையார்பட்டித் திருக்கோவில் பழம்பெரும் கோவில் என்பதை மெய்ப்பிக்கின்றது, அங்கு நடைபெற்று வருகின்ற மரவழிபாடு. இங்குள்ள தல விருட்சம் "மருதமரம்" மருதீஸ்வரர் என்ற சிவபெருமானின் திருப்பெயரோடு மருதமரத்தை ஒப்பிட்டுப் பாருங்கள் பட்டுப்போன மருதமரத்தை இன்னும் பாதுகாத்து வழிபாடு வருவது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. மதுரை மீனாட்சி ஆலயத்தில் உள்ள கடம்பமரம் தல மகிமைக்கு எடுத்துக்காட்டாகும் மதுரையின் முந்தைய பெயர் "கடம்பவனம்" என்பதாகும். ராணிப்பேட்டைக்கு அருகில் திருவலம் என்ற ஊரில் அமைந்த வில்வேஸ்வரர் ஆலயத்திலுள்ள வில்வமரங்கள் புராதனமாக கொண்டாடப்படுகிறது. இவ்வூரில் நந்தி சிவபெருமானைப் பார்த்தபடி இருக்கமாட்டார். சிவனுக்கு தனது பின்புறப் பகுதியான வால்பகுதியைக் காட்டியபடியும். முகத்தை வெளி வழியைப் பார்த்தபடியும் இருப்பார். இந்த ஆலயத்தில் உள்ள 400 ஆண்டுகளுக்கு முந்தைய ஒரு மாமரமானது மிகப் பிரமாண்டமான முறையில் உள்ளது. அம்மரத்தில் நடுவில் ஒரு ஆள் போகுமளவுக்கு பெரிய துவாரம் இருக்கும். மரத்தின் கீழக்குப்பகுதியில் செல்லும் கிளைகளில் காய்க்கும் பழங்கள் இனிப்பாகவும். மேற்குப்பகுதியில் செல்லும் கிளையில் பழங்கள் புளிப்பாகவும் இருப்பது ஆச்சர்யமானதாக இருக்கும். பிள்ளையார்பட்டி ஆலயத்தின் பின்புறமுள்ள மரத்தில் வேர்களுக்கிடையே "லிங்கம்" ஒன்று இருப்பது பார்க்கவேண்டிய ஒன்றாகும். இது முற்காலத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்ட லிங்கம். தான். இடி மழை காரணமாக ஒரு காலத்தில் புதையுண்டு போன லிங்கம். இப்பொழுது வேர்கள் வளர்ந்து விலகியதும் மேலே முளைத்து வருவது போலத் தோன்றுகிறது.

நகரத்தார்களின் பழைய பொருட்கள் தேவை

தங்களுடைய செட்டி நாட்டு வீடுகள், மரச் சிற்பங்கள், கிரிஸ்டல் சாமான்கள், ரவி வர்மா, தஞ்சாவூர் ஓவியங்கள், பழைமையான விளக்குகள், வாள், கத்தி, கேடயம், பட்டயங்கள், ஓலைச்சுவடிகள், சங்குகள், கிராணைட் பொருட்கள், நவரத்தின ஆபரணங்கள் தூண்கள், நிலைகள், கதவுகள் மற்றும் இதுபோன்ற அனைத்து செட்டி நாட்டுப் பொருட்களும் நாங்களே கொள்முதல் செய்ய இருக்கின்றோம்.

செட்டிநாட்டுக் கலைப்பொருட்கள் வாங்க, விற்க உடனே அணுகவும்.

தளபதி செல்வம் ஏ. என்.,

"செட்டிநாடு" இந்திய கைவினைப் பொருட்கள் வளர்ச்சிக் கழகம்

333, கிராஸ்கட் ரோடு, சிங்கப்பூர் பிளாசா, காந்திபுரம், கோவை - 641 012
தொலைபேசி : 235501, 235351, 236971, 236973, 236974
பேக்ஸ் : 91-0422-236974 மொபைல் : 098430-44455

Koviloor Digital Library

With Best Compliments From:



மனதை கவர்ந்துவிடும்
கல்யாண பட்டுப் புடவைகள்
மற்றும் கண்கவர்
அனைத்து ஜவுளி ரகங்கள்

ஸ்ரீ சிவலிங்கம்
சில்க்ஸ் A/C
அம்மன் சன்னதி மதுரை

☎ 623229

Koviloor Digital Library

பாதரக்குடி ஆன்மீகச்சோலை

பாதரக்குடி ஆதீனத்தின் சார்பில் ஆன்மீகச்சோலை 38 நிகழ்ச்சி 7.5.98 மாலை 4 மணியளவில் தவத்திரு. ஆதீனகர்த்தர் ரவீந்திரசுவாமிகள் தொடங்கி வைத்தார்கள். கவிஞர் அப்பச்சி சபாபதி "மரணமிலாப் பெருவாழ்வு" என்ற தலைப்பில் ஆன்மீக உரை நிகழ்த்தினார்கள்" சிவானந்த லஹரி" பற்றி உரை நிகழ்த்தினார்கள்.

நகரச்சிவன் கோவில்

காரைக்குடி நகரச்சிவன் கோவிலில் 13.6.98 அன்று "சந்தக்கவிஞர்" எம். எஸ் இராமநாதன் அவர்கள் " கம்பரின் கவியின்பம்" என்பது பற்றி உரையாற்றினார்கள். கவிஞர் மணிபாரதி தொடங்கி வைக்க, கந்தனருள் இராமநாதன் நன்றி கூறினார். இது வாரவாரம் நிகழ்த்தப்படுகிற தொடர் நிகழ்ச்சி ஆகும்.

திருமுருக கிருபானந்த வாரியார் பொன்மொழிகள்

எல்லோருக்கும் சமமானவை	இரண்டு	பிறப்பு, இறப்பு.
தவிர்க்க முடியாதவை	இரண்டு	பசி, தாகம்.
நம்மால் பிரிக்க முடியாதவை	இரண்டு	பாசம், பந்தம்.
வருவதும் போவதும்	இரண்டு	இன்பம், துன்பம்.
அடக்க முடியாதவை	இரண்டு	ஆசை, துக்கம்.
அழிவைத் தருபவை	இரண்டு	கோபம், பொறாமை.
தானாக வருபவை	இரண்டு	இளமை, முதுமை.
வந்தால் போகாதவை	இரண்டு	புகழ், பழி.
போனால் வாராதவை	இரண்டு	மானம், உயிர்.
நம்முடன் வருபவை	இரண்டு	பாவம், புண்ணியம்.

நூல் வெளியீட்டு விழா

கோனாபட்டு அருள்மிகு கொப்புடையம்மன் மீது டாக்டர் அர. சிங்கார வடிவேலன் அவர்கள் எழுதிய கொப்புடையம்மன் பாமாலை வெளியீட்டு விழா 2.5.98 அன்று காலை ஆலய மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. நகைச்சுவை பேரரசு பா. நமச்சிவாயம் தலைமையில் கவியரங்க வாழ்த்தரங்கம் நடைபெற்றது. "**காலங்களில் அவள் வசந்தம்**" என்ற தலைப்பில் டாக்டர் அர. சிங்காரவடிவேலன் அவர்களும், "**கலைகளில் அவள் ஓவியம்**" என்ற தலைப்பில் கவிஞர் சித. சிதம்பரம் அவர்களும் "**மாதங்களில் அவள் மார்கழி**" என்ற தலைப்பில் கவிஞர் சிவல்புரி சிங்காரம் அவர்களும் "**மலர்களில் அவள் மல்லிகை**" என்ற தலைப்பில் கவிஞர் அப்பச்சி சபாபதி அவர்களும், "**கவிஞனாக்கினாள் என்னை**" என்ற தலைப்பில் பொற்கிழிக்கவிஞர் கா. நாகப்பன் அவர்களும் "கவிதை பாடினார்கள்" நிகழ்ச்சியில் "**கவிமுரசு**" என்ற பட்டம் டாக்டர் அர. சிங்காரவடிவேலன் அவர்களுக்கு வழங்கப்பட்டது. நிகழ்ச்சியை ஹாங்காங் நாச்சியப்ப செட்டியார் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்கள் ஏராளமான பெருமக்கள் கலந்து கொண்டார்கள்.

Koviloor Digital Library

கவியரசு கண்ணதாசன் சிந்தனைகள்

— ஆர். சொக்கலிங்கம் மதுரை

சிறிய கொடிகளில் பெரிய பூசணிக்-காய்கள் காய்ப்பது போல் சிலரது நம்பிக்கை அவர்களது சக்தியை விட அதிகமாக இருக்கிறது. பெரிய மாமரம் சிறிய கனிகளை ஈன்றெடுப்பதுபோல் எனது சக்தி நம்பிக்கை -யைத் தாலாட்டுகிறது.

நமது முன்னோர்கள் விபரமில்லாதவர்-களா? ஆமாம்? அப்படித்தான் கருதிக் கொண்டு இருக்கிறார்கள் சில பகுத்தறிவு வாதிகள். ஆனால் காலமும் அனுபவமும் அவர்களை நிரந்தரமாக அறிவாளிகளாகவும். நம்மைத் தற்காலிகப் புத்திசாலிகளாகவும் காட்டிக் கொண்டிருக்கின்றன. இறைவனின் எதிரொலியைப் பற்றி நமது மூதாதையர் சொன்னதெல்லாம் உண்மை சத்தியம். தர்மம். நாணயம். நேர்மை என அவர்கள் சொன்னது வெறும் வார்த்தை ஜாலமல்ல. அடுத்தவன் உடமையை நீ கவர்ந்தால் உன் பொருளை மற்றவன் கவருவான் இந்த அனுபவம் பகுத்தறிவாதிகளுக்கே உண்டு. எப்படித் தீர்க்க நினைக்கிறீர்களோ அப்படி தீர்க்கப்படுவீர்கள் என்பது கர்த்தர் வாக்கு.

மொழி:

எந்த மொழியையும் வெறுப்பதன் மூலம் ஒருவன் தாய்மொழிக்கு நம்மை செய்துவிட முடியாது. அதுமட்டுமல்ல அவன் தனக்கே துரோகமும் செய்து கொள்கிறான். தமிழின் பெயரால் கூப்பாடு போடுவது அரசியல். தமிழ் நமது உயிர் அதுபோல் வடமொழி நமது ஆன்மா வெறும் பட்டப் படிப்பு படித்தவனுக்கெல்லாம் கிடைக்காத வாய்ப்பு மொழிப் பயிற்சி பெற்றவர்களுக்கே கிடைக்கும். வெற்றி பெற்றவனுக்கு எதுவும் சர்வசாதாரணமாகத் தெரிகிறது. தோல்வியுற்றவனுக்கு எதைக் கண்டாலும் பயம் வருகிறது. வென்றவனுக்கு மலையும் கடுகு. தோற்றவனுக்கு கடுகும் மலை. அவன் மலையோடு மோதுகிறான். இவன் கடுகைக் கண்டு பயந்து சாகிறான். தோல்வி அடைந்தவர்களைப் பழி வாங்காதீர்கள் அன்போடு நடத்துங்கள். காலை வெயிலில் உங்கள் நிழல் முன் பக்கமாக விழுந்தால் மாலை வெயிலில் பின் பக்கமாகத்தான் விழும். காரியம் செய்பவனைவிட வேஷம் போடுகிறவனுக்குத்தான் நினைப்பது கிடைக்கிறது. சொந்தமாகத் தொழில் நடத்த வருமானம் பெற்றுக் குடும்பத்தைக் காற்பாற்றிக் கொண்டு அரசியலை இலவசமாக கடமையாகச் செய்வோர் இந்த நாட்டில் மிகக் குறைவு. தொழில் அமைதி கெட்டுப்போன நாடு பொருளாதாரத்தில் உருப்பட முடியாது. காரணமில்லாமல் அடிக்கடி வேலை நிறுத்தம் செய்வது இந்தியாவில்

Koviloor Digital Library

காணப்படுவது போல் வேறு எங்குமில்லை. சிவில் உரிமையே இல்லாத சீனாவில் வேலை நிறுத்தம் என்ற பேச்சே இல்லை. இங்கே நாட்டுப் பாதுகாப்புப் பற்றிக்கூட நமக்கு அக்கறை இல்லை. துயரங்களின் தொடக்கம் கண்ணீரில் தான். ஆனால் அதுவே தொடர்கதையாகிவிட்டால் சிந்தனை செயலற்றுப் போய்விடுகிற்து. இக்கட்டான நேரங்களில் பெண்ணுக்கு வருகின்ற துணிச்சல். சிங்கத்துக்கு கூட வராது. ஈட்டி முனையால் சாதிக்க முடியாதைக்கூட இதயக் கனிவால் சாதிக்க முடியும். புகழ். பழி. வாழ்வு. இம்மூன்றும் பெருமளவில் வந்தால் இல்லையே என்பது சித்திரவதை. காரியம் செய்வது என்று துணிந்துவிட்டால் யாரையாவது பகைத்துக்கொண்டுதான் தீர வேண்டும். பகையே இல்லாதவன் என்று ஒருவன் பெயர் எடுத்தால் அவன் ஒரு காரியமும் செய்யாதவன் என்று பொருள். காந்திக்கும் பகைவர்கள் இருந்தார்கள். கடவுளுக்கும் பகைவர்கள் இருந்திருக்கிறார்கள். கிணற்றில் விழுந்த பாம்பைக்கூட எடுத்து வெளியே விடும் பண்பான ஞானிகள் வாழ்ந்த நாடு நம்முடைய நாடு. நான் ஒன்றுமே இல்லை என்று எவன் நினைக்கிறானோ அவனுக்குத்தான் ஆண்டவனைத் தவிர ஒன்றுமே இல்லை என்ற தெளிவு வரும். எதிர்த்துப் பேசினால் சுடச்சுட பதில் கொடுத்துவிட முடியும். புகழ்ந்து பேச ஆரம்பிப்பவனை அப்புறப்படுத்துவது கடினமான காரியம். சொல்லிவிட்டுச் சிந்திக்கிறவன். மனிதன். சிந்தித்துச் சொல்கிறவன் ஞானி.

காதல் பாடல்களில் கருத்துகள்:

பறவைகளில் அவள் மணிப்புறா
பாடல்களில் அவள் தாலாட்டு
கனிகளிலே அவள் மாங்கனி
காற்றினிலே அவள் தென்றல்
உன்னைக் காணாத கன்னும் கண்ணல்ல
உன்னை எண்ணாத நெஞ்சும் நெஞ்சல்ல
நீ சொல்லாத சொல்லும் சொல்லல்ல
நீ இல்லாமல் நானும் நானல்ல.
அன்னத்தைத் தொட்ட கைகளினால் மதுக்
கிண்ணத்தை இனி நான் தொடமாட்டேன்.
பனி இல்லாத மார்கழியா
படை இல்லாத மன்னவரா
இனிப்பில்லாத முக்கனியா
இசையில்லாத முத்தமிழா

இப்படி ஆழமான வார்த்தை நயம். முரண்பாடு, இது கண்ணதாசன் பலம். குழந்தை போன்ற மென்மையான குரல் வளம். மாற்றம் மனிதனின் மகத்தான சக்தி என்பதை உலகுக்குச் சொன்ன கவிஞன். வாழ்ந்த வரை வணங்காமுடி. அர்த்தமுள்ள இந்துமதமும். இயேசு காவியமும். சிறுகூடல் பட்டி சிங்கம். மறைந்த பின்னும் மண்ணில் வாழும் கவித்தங்கம். "கண்ணதாசன்" பெயரை உச்சரிக்கும் போதே உற்சாகம். குழந்தை போன்ற குரல் வளம். தழிழ் வார்த்தைகளை தன் வசப்படுத்தி கவியரசர். பாடல்களில் எளிய நடை. ஆன்மீகத்தில் அவரது பணி இணையில்லாத ஒன்று. அரசியலில் அவர் பங்கு பலரை சிந்திக்கச் செய்தது. உலக நடைமுறையை உணர்ந்து சிந்தித்த கவிஞன் சிறுகூடல் பட்டியில் தொடங்கிய வாழ்க்கையை சிகாகோவில் முடித்துக்கொண்டார்.

Koviloor Digital Library

அவர் சிந்தனைகளில் சில:

நம்பிக்கையில் தான் உலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது. யானையின் பலம் தும்பிக்கையில் மனிதனின் பலம் நம்பிக்கையில். நம்பிக்கை வைப்பதன் மூலம் தான் நம் மனமாமது செம்மைப்படுகின்றது. வாழ்க்கை செம்மைப்படுகின்றது.

ஏற்றம் என்பது இறைவன் வழங்கும் பரிசு
இறக்கம் என்பது அவன் செய்யும் சோதனை

நினைப்பது எல்லாம் நடந்துவிட்டால்
தெய்வம் ஏதும் இல்லை.

எப்போது நீ போடும் திட்டம் தோல்வியுறுகிறதோ அப்போது உனக்கு மேலானவன் அதை நடத்துகின்றான் என்று பொருள் எப்போது என் திட்டங்கள் வெற்றி பெறுகின்றனவோ. அப்போது இறைவன் உனக்கும் அனுமதியளித்து விட்டான் என்றுதானே பொருள். மனிதனது வாழ்க்கை பூஜ்யத்தில் ஆரம்பிக்கின்றது. முன்பக்கம் நம்பர் விழுந்தால் இறைவனின் பரிசு. பின்பக்கம் விழுந்தால் சோதனை. மேடும் பள்ளமுமாக வாழ்க்கை மாறிமாறி வந்தால் உனக்குப் பெரிய வீழ்ச்சியில்லை. ஒரேயடியாக உச்சிக்கு நீ போய்விட்டால் அடுத்துப் பயங்கரமான சரிவு காத்திருக்கின்றது. வீழ்ச்சியில் கலக்கமோ எழுச்சியில் மயக்கமோ கொள்ளக்கூடாது. தர்மம் என்றும் சத்தியம் என்றும். நேர்மை என்றும் சொல்லி வைத்தவர்கள் நம் மூதாதையர்கள். அது எவ்வளவு அனுபவமான சொல் கஷ்டத்திலும் நேர்மையாக இரு. நீ ஏமாற்றபட்டாலும் பிறரை ஏமாற்றாதே. "பிறர் அதர்மமாக நடக்கிறார்கள் என்பதற்தாக நீ அதர்மமாக நடக்காதே. நீ தர்மமாக நட" சுவாமி விவேகானந்தர் சொன்னது இது தானே. பிறந்தோருக்காகச் சிரிக்காமலும். இறந்தோருக்காக அழாமலும் சமநோக்கோடு நின்று மன அமைதி கொண்டால் வெற்றி நிச்சயம். அது தான் வாழ்க்கை நெறியும் கூட. நன்றியுடைமை தெய்வபக்தி. வஞ்சகமற்ற உள்ளம் இவற்றுக்கு ஆண்டவன் எப்போதும் துணை நிற்கிறான். விதையைப் போட்டுவிட்டு கனி வராதா என்று ஏங்கக்கூடாது. விதைத்துக்கொண்டே போங்கள் திரும்பிவந்து பாருங்கள் மரங்கள் பழுத்துக் குலுங்குவதைப் பாருங்கள் வாழ்க்கை எதிலே ஓடிக் கொண்டிருக்கிறது. ஆசையிலும் நம்பிக்கையிலுமே -- ஓடிக்கொண்டிருக்கிறது. சராசரி மனிதனை ஆசைதான் இழுத்துச் செல்கிறது. அவன் தவறுக்கெல்லாம் அதுவே காரணமாகிறது. வேண்டும் என்கிற உள்ளம் விரிவடைந்து கொண்டே போகிறது. போதும் என்ற மனம் சாகும் வரை வருவதில்லை. ஒரு விஷயம் கைக்கு வந்துவிட்டால் நூறு விஷயங்களை மனது வளர்த்துக்கொள்கிறது. நிரந்தரமாக இன்பத்தை அனுபவித்தவனும் இல்லை. நிரந்தரமாக துன்பத்தில் உழன்றவனும் இல்லை. முதற்கட்டம் வறுமை எனறால். அடுத்த கட்டம் செல்வம்.

எல்லாச் செல்வங்களையும் நிரந்தரமாக எவனுக்கு இறைவன் வழங்கியதில்லை. உலக வரலாறுகளை கூர்ந்து நோக்குங்கள். நினைத்ததை எல்லாம் நடத்தி முடித்தவன் எவன்? நினைப்பவன் தான் நீ. முடிப்பவன் அவன். உன் எதிரியை நீ சுலபமாக அடையாளம் கண்டு கொண்டுவிட முடியும். ஆனால் நண்பர்களிலே நல்ல நண்பர் யார் என்பது அனுபவத்தின மூலமேதான் தெரியுமே தவிர. சாதாரண அறிவினால் கண்டுகொள்ள முடியாது.

Koviloor Digital Library

முகத்து நேரே சிரிப்பவன்
முகஸ்துதி செய்பவன்
கூனிக் குழைபவன்
கூழைக்கும்பிடு போடுபவன்

இவனெல்லாம் நல்ல நண்பன் மாதிரியே தோற்றமளிப்பான். எந்த நேரத்தில் அவன் என்னைக் கவிழ்ப்பான் என்பது அவனுக்கும் கடவுளுக்கும் மட்டுமே தெரியும். நண்பர்களே! இளைஞர்களே சிந்திப்போம். நல்ல செய்திகளை நாளும் கேட்போம். ஒன்றுபட்ட பாரதம் வலிமையடைய உழைத்திடுவோம். கணணதாசனின் சிந்தனைகளுக்கு நாம் செயல் வடிவம் தருவோம். வாழ்வில் உயர்வோம்.



கலலல் நீதிபதி திரு. என். பழனியப்பன் குமாரர் டாக்டர் சுப்பிரமணியன் MS., F.R.C.S. Royal Preston Hospital, preston, (U.K.)க்கும் வெற்றியூர் டாக்டர் என். ரெங்கநாதன் குமாரத்தி உலகம்மை B.B.A. க்கும் 27.5.1998 அன்று கல்லலில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. திருமணத்தில் மீனாட்சி மைந்தன திரு. வி. என். சிதம்பரம். மதுரை மீனாட்சி அம்மன் கோவில் அறங்காலவர் குழுத்தலைவர் திரு. இராம. இராமநாதன் முன்னாள் அமைச்சர் திரு. எஸ். ரகுபதி மற்றும் நீதிபதிகள், வழக்கறிஞர்கள், டாக்டர்கள் அறிஞர் பெருமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

6.6.98 அன்று சென்னை ஹோட்டல் பாம்குரோவில் நடந்த வரவேற்பிலும உயர்நீதிமன்ற நீதிபதிகள் திரு. ஏ. ராமமூர்த்தி. திரு. பி. பாஸ்கரன் மற்றும் நீதிபதிகள். வழக்கறிஞர்கள். டாக்டர்கள் மற்றும் ஏராளமானோர் கலந்து கொண்டார்கள்.

Koviloor Digital Library

ஸ்ரீ சனீஸ்வரர் துணை

நகரத்தார்களுக்கு முக்கிய அறிவிப்பு

பழைய மலேயா தபால் கவர்கள் தேவை

மலேயா: 1946–க்கு முன்பு மலேயாவில் பயன்படுத்தப்பட்ட தபால் கவர்களும், போஸ்ட் கார்டுகளும் எனது மலேயா தபால் சரித்திர ஆராய்ச்சிக்காக (Malaya Postal History Research) தேவை.

பர்மா: 1942 மே மாதம் முதல், 1945 ஆகஸ்ட் மாதம் வரை, பர்மா உள்ளூரில் பயன்படுத்தப்பட்ட எல்லா தபால் கவர்களும், போஸ்ட் கார்டுகளும் மட்டுமே தேவை.

அதிகமான கவர்களுக்கு - மிக அதிகமான விலை!

கிழிந்த கவர்கள் – நீளமான கவர்கள் – தனி ஸ்டாம்புகள் தேவை இல்லை

எனது சென்னை விலாசத்துடன் நேரில் அல்லது தபால் மூலம் தொடர்பு கொள்ளவும்.

S.S. NATHAN
E 29 Second Avenue, Besant Nagar,
Chennai - 600 090
(Ph: 4919296 - 4912342)

காரைக்குடி – கோவிலூர் ரோடு – டீலக்ஸ் லாட்ஜில் நான் தங்கி இருப்பேன். காரைக்குடியில் நேரில் இந்தத் தேதிகளில் என்னைச் சந்திக்கலாம். ஆனால் காரைக்குடிக்கு தபால் போட வேண்டாம்!

27-7-1998 & 28-7-1998, 24-8-1998 & 25-8-1998

Koviloor Digital Library

விநாயகர் பெருமை

"கைத்தல நிறைகனி அப்பமொட அவல்பொரி
கப்பிய கரிமுகன் அடி பேணிக்"

வாழ்க்கையில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வகையான இடர்கள் அவற்றையெல்லாம் நீக்குபவர் விநாயகர்.

"தனதழி வழிபடுபவர் இடர் கலைந்திடும்" ஞானசம்பந்தர்

" நாயகன்" என்றால் தலைவன் என்று பொருள் பிராணநாயகன், சபா நாயகன், கதாநாயகன். இப்படி எத்தனையோ நாயகன் உண்டு இதில் விஷேசமான நாயகன்" வி + நாயகன் வி = விநாயகன். "வி" என்றால் இல்லை என்று பொருள்.

வேகமில்லாத ராஜா : "வி"வேகராஜா.
மலனில்லாதவன் - "வி" மலன்

தனக்கு நிகர், நாயகர் இல்லை அதான் வி|நாயகன்

" கைத்தலம் நிறைகனி" என்பது கையில் விநாயகர் பழமேந்தியிருப்பார். பழம் வெற்றிக்கு அறிகுறி. உதாரணமாக ஒரு காரியம் வெற்றி பெற்றதா? எனக்கேட்பவர் காயா? பழமா? என்று கேட்பது பழக்கம். அதை வைத்துப் பார்த்தால் "பழம்" என்பது "வெற்றி" என்ற பொருளாகும் விநாயகரை எண்ணித்தொடரும் காரியங்கள் பழமாகும்.

"அப்பமொடு அவல் பொரி'

அப்பம். பச்சரிமாவு. தண்ணிகலந்து, நெய் சேர்த்து செய்வதாகும். இதில் ஈரம் போனால் அப்பமாகும். "நான்" என்கிற ஈரம் போகவேண்டும் என்பதாகும்.

அவல்பொரி

வருத்த பொரி முளைக்காது - அது போல விநாயகரை வணங்குபவர்களின் துயரங்கள் அழுங்கிப் போகும்.

கைத்தல் நிறைகனி பாடலில், ஒற்றுநீக்கி 200 எழுத்துவரும் ..... மதுரைக் கோவில் இரட்டைபிள்ளையார் உண்டு ஒரு பிள்ளையார் என்பது 100 என்பதாகும் இரண்டு பிள்ளையார் 200 அற்புதமான பாடல்.

கரிமுகன் = கரத்தை -. கரி சினை ஆகுபெயர்.
கரிமுகன் - யானைமுகன்
கரி - என்றால் சாட்சி, சாட்சிமுகமாய். இருப்பார். விநாயகர்

அவருடைய பாதம் பணிந்தோர்க்கு சகல பலன்களும் கிட்டும், சிஷ்டி, திதி, சம்ஹாரம், திரபவம், அனுக்கிரஹம் என்று, 5 திருக்கரத்தினாலே ஐந்தொழில்களை செய்கிறார். மூலதாரத்தில் உள்ள விநாயகரை வழிபட்டால் சகஸ்தாரத்தில் உள்ள அந்த் அருட்பெருஞ்ஜோதியை தன் கையால் தூண்டிக் காட்டினார் அதனாலே தான் திருச்செந்தூர் விநாயகருக்கு தூண்டிகை விநாயகர் என்று பெயர்.

Koviloor Digital Library

பெருமாள் கழுத்துக்கு மேலே யானை முகம் (விலங்கு). கழுத்துக்கீழே இடுப்புவரை தேவசரிரம். இடுப்புக்கீழே பூதசரிரம்... கொம்புள்ள பகுதி. ஆண். கொம்பில்லாத பகுதி பெண். ஆக ஆணாக. பெண்ணாக. விலங்காய். தேவராய். பூதமாய். அதாவது உயர்திணையாய். அஃறிணையாய் விளங்குகிறார்.

பெருச்சாலி - கீர்நோக்கு - அஞ்ஞானம்

யானை - மேல் நோக்கு - மெஞ்ஞானம் - விநாயகர் எலியைப் போல சின்னதாகவும். யானையைப் போல உயர்வாகவும் விளங்குகிறார்.

ஆக சகலமாய் விளங்கும் விநாயகப் பெருமானை வணங்குப்வர்களுக்கு முழுப்பலனும் கிடைக்கும் என்பது உறுதி.

எனக்கு மாலை போட வேண்டாம்

ஒருமுறை கருமுத்து தி. மா. தியாகராசன் செட்டியார் அவர்களை பேட்டி எடுக்க வேண்டும் புகைப்படத்தை வெளியிட வேண்டுமேன எனக்குப்பட்டது. நமது குழுவினர் அவர்களைச் சந்தித்து நம் ஆவலைச் சொன்னார்கள் அவர்கள் சொன்ன பதில் நம்மை சிந்திக்க வைத்தது. அவர்கள் சொன்னார்கள் " இந்த நிறுவனங்களைத் நடத்திவரும் எங்கள் மேனேஜரைப் பேட்டி எடுங்கள். இந்த நிறுவனங்களைத் தொடங்கி அருள்பாலித்துக் கொண்டிருக்கும் எங்கள் ஐயா. கருமுத்து தியாகராசன் செட்டியார் புகைப்படத்தை போடுங்க" என்று சொன்னார். அன்னாரின் தன்னடக்கத்தை நினைத்து மகிழ்ந்தேன் இதை எண்ணுகிற போது எனக்கு இன்னொரு பழைய நினைவு வந்தது.

ஒரு முறை TVS சுந்தரமய்யங்கார் பேரன் (பெயர் போட வேண்டாம் என கேட்டுக் கொண்டதால் போடவில்லை) அவர்களைச் சந்திக்கையில் ஒரு மாலையுடன் ஒரு சிவாச்சாரியாரையும் அழைத்துக் கொண்டு. மீனாட்சி அம்மன் கோவிலில் திருமணக்கோல மண்டபம் அமைக்க நன்கொடை கேட்பதற்காக சென்றிருந்தேன். அலுவலகத்தில் இருந்த TVS அய்யங்கார் பேரனுக்கு சிவாச்சாரியாரை மாலை அணிவிக்க சொன்னேன். அவர் மாலையை அணிவிக்க சென்றபோது. ஐயா *"எனக்கு மாலை போடவேண்டாம்"*. இந்த நிறுவனத்தை உண்டாக்கி புகழடையச் செய்த மாமேதை எங்கள் தாத்தாவின் சிலைக்கு மாலையைப் போடுங்கள் என்று என்னை அழைத்துப் போய் அந்த சிலை வடிவில் அமர்ந்திருந்த தொழில் மேதை. நேர்மைப்பிரவாகம். ஞானச்சூரியன் TVS அய்யங்காருக்கு மாலை அணியச் செய்ததோடு மட்டுமல்லாது உடனடியாக 1 லட்சம் ரூபாய் நன்கொடையையும் தந்த அந்த மாமனிதரை நினைத்து நெகிழ்ச்சியுற்றேன்.

வி. என் சிதம்பரம்

வாசகர்களே! நம் குலப் பெரியோர்களே!

உங்கள் படைப்புக்களான ஒரு பக்க கதை, கட்டுரை, செய்திகள், துணுக்குகள், ஆன்மீகச் சிந்தனைகளை எங்களுக்கு அனுப்புங்கள். பிரசுரித்து பேரின்பமடைவோம்.

– ஆசிரியர்–

Koviloor Digital Library

மணி விழா

* தேவகோட்டை. திரு. முரு. சி.பி. சுப்பையா செட்டியார் - சிவகாமி ஆச்சி அவர்களின் மணிவிழா 3.6.1998 புதன்கிழமை காலை தேவகோட்டை பழனியப்பவிலாஸ் திருமண மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

* பொன். புதுப்பட்டி திரு. சுப. சோம. சுப. கணபதி. செட்டியார் - கண. சிகப்பி ஆச்சி அவர்களின் மணிவிழா 21.6.98 ஞாயிறன்று பொன். புதுப்பட்டியில் சிறப்பாக நடைபெற்றது அவ்வமயம் நிகழ்ந்த பட்டிமன்றத்திற்கு புலவர்மாமணி திரு. மா. முத்துராமன் அவர்களின் தலைமையில் "ஆனந்தமயமான வாழ்விற்கு பெரிதும் தேவைப்படுவது அருளா? பொருளா?" என்ற தலைப்பில் சிறப்பான பட்டிமண்டபம் நடைபெற்றது டாக்டர் சுப. கதிரேசன், டாக்டர் இராம. சௌந்தரவல்லி, செல்வி. தர்மாம்பாள், பூங்கோதை, சிவ. கைலாசநாதன், வைஜெயந்திராஜன் ஆகியோர் உரையாற்றினார்கள். தாலாட்டுக் கவிஞர் குமரப்பன் அவர்கள் தொகுத்து வழங்கினார்கள்.

அன்பு நேசனே! கண்ணதாசனே

- உனக்கு
  அன்பு மனம் உண்டு
  அறிவு மனம் உண்டு
  அஸ்தமனம் இல்லை

- காட்டுக்குள் தேனீக்கள்
  கூட்டுக்குள் வைத்ததைப்
  பாட்டுக்குள் வைத்தவன்
  நீ

- பன்னிரண்டு தான்
  உயிரெழுத்துக்கள்
  மற்ற எழுத்துக்களையும்
  உயிரெழுத்துக்களால்
  மாற்றியவன்
  நீ

- உன்னிடம்
  தழிழ் கனம் இருந்தது
  தலை கனம் இல்லை

- சிறு கூடல் பட்டியில்
  சிற்றாறாய் ஊற்றெடுத்து
  சிகாகோ நகரில்
  சங்கமித்த
  ஜீவநதியே.....

- நானும் நீயும்
  எதிர் எதிராய்
  கடை விரித்தாலும்
  நாணயமான
  வியாபாரிகளாகவே
  நட்பு பாராட்டி வந்தோம்.

- என்ன சொல்லி என்ன?

- எழுதப்படிக்கத்
  தெரியாத எத்தனையோ
  பேர்களில்
  எமனும் ஒருவன்
  ஒரு அழகான
  கவிதைப் புத்தகத்தை
  கிழித்துப் போட்டு
  விட்டான்

– கவிஞர் வாலி

Koviloor Digital Library

அறிவிப்பு

இதுவரை நகரத்தார் குரலில் துணை ஆசிரியராக பணியாற்றிய திரு. எல். சுந்தரம் அவர்கள் 18.6.98 முதல் பணியிலிருந்து ஓய்வு பெறுகிறார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆசிரியர்

அறிவிப்பு

நகரத்தார் குரல் 1982 ஆண்டுமுதல் இன்றுவரை பல்வேறு வகை சிறப்புச் செய்திகளை தாங்கி வந்து உங்கள் கரங்களில் தவழ்ந்திருக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். அத்தகைய பழைய இதழ்கள் இப்பொழுது தேவைப்படுவர்கள் எழுதினால் அனுப்பித்தருகிறோம். ஒரு ஆண்டு புத்தகம் வேண்டுவோர் ரூ 70 அனுப்பினால் பைண்டிங் செய்த பிரதியை அனுப்பிவைக்கிறோம். எந்த ஆண்டு புத்தகங்கள் வேண்டுமென்ற விபரத்தோடு ரூ 70 ஐ M.O. மூலம் மலர் முகவரிக்கு அனுப்பி பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம்.

– நிர்வாகி

கோவிலூர் ஆதினம்

கோவிலூர் ஆதினத்தில் திருஞானசம்மந்தர் திருநாள் 11–6–98 மாலை சிறப்பாக நடைபெற்றது திருஞானசம்பந்தர் திரு உருவம் வீதீ ஊர்வலம் கோவிலூர் ஆதினகர்த்தர் தவத்திரு நாச்சியப்ப ஞான தேசிக சுவாமிகள் தலைமையில் நடைபெற்றது. ஓதுவா மூர்த்திகள் தேவாரம் பாடிவந்தனர் காசிஸ்ரீ அருசோ திருஞான சம்பந்தர் பற்றி உரையாற்றினார்.

பாராட்டுகிறோம்

மதுரை OCPM மேல்நிலைப்பள்ளியில் நடந்து முடிந்த +2 தேர்வில் செல்வி N. ராமு என்ற நம் சமூகப் பெண் 1200 க்கு 1130 க்கு மதிப்பெண்கள் பெற்று தேறியுள்ளார். அவர் கணக்கில் 200 க்கு 200 எடுத்த தோடு, கம்ப்யூட்டர் சைன்ஸ் படிப்பில் 200 க்கு 196 எடுத்து பள்ளியிலேயே முதலாவ–தாக தேறியுள்ளார். இவர் சொக்கநாதபுரம் சுப.நா. நாராயணன் செட்டியார் – மீனாட்சி ஆச்சியின் புதல்வியாவார். திரு. சுப.நா. நாராயணன் அவர்கள் மதுரை வங்கியின் மதுரை தலைமைக்கிளையில் அதிகாரியாக பணிபுரிந்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

Koviloor Digital Library

பட்டினத்தடிகளின் அற்புதத் திருவிழா!

காவிரிப்பூம்பட்டினத்தில் திருவெண் காடராகிய பட்டினத்தடிகளின் அற்புதத் திருவிழா வழக்கம் போல் இந்த ஆண்டும் வெகுதான்ய ஆண்டு ஆடித் திங்கள் 12 ஆம் நாள் முதல் ஆடித் திங்கள் 23 ஆம் நாள் வரை (28.7.98 முதல் 8.898) வரை 12 நாட்கள் கொண்டாடப்பட இருக்கிறது.

நிகழ்ச்சி விவரம்

28.7.98 செவ்வாய் (1 ஆம் திருவிழா) இரவு அனுக்ஞை விக்னேஸ்வர பூஜை திருவெண்காடர் திரு அவதாரம்.

29.7.98 புதன் (2ம் ஆம் திருவிழா) காலை திருவெண்காடர் திருவெண் காட்டிற்கு எழுந்தருளல்.

30.7.98 வியாழன் (3ஆம் திருவிழா) காலை திருவெண்காடர் முக்குள ஸ்நானம். இரவு திருவெண்காடர் திருக்கல்யாணம்.

31.7.98 வெள்ளி (4 ஆம் திருவிழா) காலை மருதவாணர் குழந்தையாய் வெள்ளி விமானத்தில் எழுந்தருளல். இரவு குழந்தையின் நிறைக்குப் பொன் நிறுத்துக் கொடுத்தல். வெள்ளிக் கட்டிலில் தாலாட்டல்.

1-8-98 சனி (5 ஆம் திருவிழா) மருதவாணர் வித்தியாப்பியாசம், முத்துப் பரீட்சை ரத்தினப்பரீட்சை. மாலை மருதவாணர் கப்பல் யாத்திரைக்குக் கடற்கரை செல்லல். துறவடைதல். சேந்தனாருக்கு விலங்கிடல்.

2.8.98 ஞாயிறு (6ஆம் திருவிழா) மாலை பட்டினத்தடிகள் உருத் திராக்க விமானத்தில் பிச்சைக் கெழுந்தருளல். இரவு நஞ்சு கலந்த அப்பம் அளித்தலும் வீடு தீப்பற்றுதலும்.

3.8.98 திங்கள் (7ஆம் திருவிழா) மாலை ஞானகலாம்பிகை பரிபூரண மடைதல் இரவு முத்துச் சிவிகையில் மயானம் சேர்தல்.

4.8.98செவ்வாய் (8ஆம் திருவிழா) காலை சுக சன்னியால் இறந்த திருவாரூர்ப் பிள்ளையைப் பிழைப்பித்தல். இரவு. பல்லவனீச்சுரத்தில் கழுமரம் எரித்தல் மாலை 5.30 மணிக்கு திருவிளக்கு பூஜை.

5.8.98 புதன் (9ஆம் திருவிழா) பத்திரகிரியாரும் நாயடியாரும் அடிகள் அருளால் மோட்சமடைதல். தங்கப் பேய்க் கருப்பு தாங்குதல்.

6.8.98 வியாழன் (10 ஆம் திருவிழா) உத்திராடம். காலையில் பட்டினத்தடிகள் குருபூஜை. சேந்தனார் விலங்கு தெரித்தல். சௌந்திர நாயகி சமேத பல்லவனீச்சுரருக்கு ருத்ராபிஷேகம் நடத்தல். இரவு பஞ்சமூர்த்திகளும் பட்டினத்தடிகளும் திருவீதி வருதல்

7.8.98 வெள்ளி (11ஆம் திருநாள்) காலை பஞ்சமூத்திகளும் திருவெண் காடரும் இடப வாகனக் காட்சியுடன் கடற்கரையில் தீர்த்தம் கொடுத்தல்.

8.8.98 சனி (12 ஆம் திருநாள்) இரவு ருத்ராபிஷேகமும் விடையாற்றியும் நடைபெறும்.

உங்கள் குரல்

வைகாசி இதழில் பாங்க் ஆஃப் மதுரை பொதுமேலாளர் திரு. கதிரேசன் அவர்களுடன் சந்திப்பு அற்புதமாக இருந்தது. வட அமெரிக்கா நகரத்தார் சங்க உதவிவிபரமும் நன்றாக இருந்தன.

A.N. சிதம்பரம் விரையாச்சிலை

வைகாசி இதழை படிக்கப் படிக்க இன்பமாய் இருந்தது. வங்கி உயர் அதிகாரி திரு. வி. பழநியப்பனுடன் ஓர் சந்திப்பு" அற்புதமாய் இருந்தது. "மண்டபம் நகர விடுதியின் நிலைமை என்ன"? என்ற சந்திப்புக் கட்டுரை சிந்திக்க வைத்தது.

கண.அருணாசலம்
சொக்கநாதபுரம்

Koviloor Digital Library

இந்திய அரசாங்கம் நடத்தும் நகரத்தார் கருத்தரங்கம்

இந்திய அரசின் மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சரகத்தில் உள்ள பண்பாட்டுத் துறையின் சார்பில் மத்தியப் பிரதேச மாநிலத்தின் தலைநகரான போபாலில் இயங்கிவரும் "இந்திராகாந்தி தேசிய மனித இன அரும்பொருள் காட்சியகத்தின்" சார்பில் ஒரு குழுவினர் செட்டிநாட்டில் இருமுறை விரிவாகப் பயணம் செய்து மறைந்து வரும் நகரத்தார் மக்களின் மரபு சார்ந்த அரும் பொருட்களை உரியவர்களிடம் இருந்து சேகரித்துப் பொக்கிஷங்களாகப் பாதுகாக்க முயற்சி மேற் கொண்டுள்ளனர் இப்பொருட்கள் அரும் பொருட்காட்சியகத்தில் காட்சிப் பொருள்களாக அமைக்கப்படுகின்றன.

இத்துறையில் சார்பில் 18.6.98 காலை சென்னை லலித் கலா அகாடமியில் ஒரு கூட்டம் நடைபெற்றது. அதன் செயலர் RM. பழநியப்பன் வரவேற்று ஆவன செய்தார் "பொற்கிழிக் கவிஞர்" "காசிஸ்ரீ" அரு. சோமசுந்தரன் அக்கூட்டத்தில் கலந்து கொண்டார். தேவகோட்டையில் 1998 சூலை 16. 17. 18. தேதிகளில் நகரத்தார் கருத்தரங்கம் நடத்த முடிவு செய்யப்பெற்றது. காசிஸ்ரீ அருசோமசுந்தரன் ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்பெற்று. நகரத்தார் கருத்தரங்கைத் தேவகோட்டையில் கருதாஊரணி அருகில் உள்ள பெரியமைனர் வீட்டில் சிறப்பாக நடத்த எல்லா ஏற்பாடுகளும் செய்யும்படி கேட்டுக் கொள்ளப்பெற்றார். இப்பொழுது விரிவான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. கோவிலூர் ஆதீனகர்த்தர் தவத்திரு நாச்சியப்ப ஞான தேசிக சுவாமிகள் மூன்று நாள் கருத்தரங்கிற்கும் தலைமை தாங்குகிறார்கள். மத்திய அரசின் அதிகாரி டாக்டர் சக்கரவர்த்தி I. A. S. விழாவினைத் தொடங்கிவைக்கிறார். வி.என். சிதம்பரம். டாக்டர். தமிழண்ணல். டாக்டர் சுப. அண்ணமலை. சொ. சொ. மீ. சுந்தரம். பாதரக்குடி. துலாவூர். குன்றக்குடி. காளையார்கோவில் ஆதீனகர்த்தர்கள். டாக்டர் ச. மெய்யப்பன். டாக்டர் அர. சிங்காரவடிவேலன். டாக்டர். வ. தேனப்பன். பாலகவி இராமநாதன் செட்டியார். தேனி உடையப்ப செட்டியார். சோம. நாரயணன் செட்டியார். புலவர் நாக சண்முகம். டாக்டர் சபா அருணசலம் டாக்டர் கரு. முத்தையா. விஞ்ஞானி இராகவன். விஞ்ஞானி RM. கிருஷ்ணன். டைரக்டர் இராம. நாராயணன். பழ. கருப்பையா. பழ. முத்தப்பன். லேனா தமிழ்வாணன். ஓவியவித்தகர் ஆவுடையப்பன். பேராசியர் இராம இராமநாதன். டாக்டர் MR. முத்தையா முதலிய பலர் விழாவில் கட்டுரை படிக்க அழைக்கப்பட்டுள்ளனர். விழா காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை நடைபெறும். தினந்தோறும் பெண்களுக்குத் கோலப்போட்டி நடத்தப் பெறும். கோலம் போடுதல். முடைதல். பின்னுதல். கண்ணாடி ஓவியம். செட்டிநாட்டுப் பலகாரம் செய்தல் முதலியன 18.7.98 மாலை நடைபெறும். நகரத்தார்களின் பாரம்பரிய சிறப்பினை உலகிற்கு வெளிப்படுத்த அழிந்து வரும் பண்பாட்டினைக் காப்பற்ற மத்திய அரசு முதன் முதலில் இந்த மாநாட்டின் நடத்துகிறது. நகரத்தார்கள் ஆண்களும் பெண்களும் இந்தக் கருத்தரங்கில் கலந்து கொண்டு பயன் பெறுமாறு பொற்கிழிக்கவிஞர் அரு. சோமசுந்தரன் கேட்டுக் கொள்கிறார்.

– அருசோ

Koviloor Digital Library

காதலிக்காக கட்டப்பட்டதல்ல தாஜ்மஹால்

சில ஆண்டுகளுக்கு முன் வடஇந்தியா யாத்திரை சென்றிருந்தபோது. ஆக்ராவிலுள்ள யமுனை நதியோரத்தில் 400 ஆண்டுகளுக்கு முன் எழுந்த உலக அதிசயமாம் தாஜ்மஹாலையும் பார்க்கச் சென்றேன். மின்னலோடு போட்டியிடும் 'ப்ளீர்' வெண்மையாய் தகதகக்கும் அந்தக்காதல் மாளிகையைக் கண்டபோது என் மனம் சரித்திர காலத்துக்குள் சஞ்சரித்தது.

'வரலாற்று ஆசிரியர்கள் கூறுவதுபோல் இந்த உலக அதிசயம் - ஷாஜஹானின் காதல் நாயகிக்காக எழுந்த நினைவு மண்டபமா? ஷாஜஹானின் மனைவி மும்தாஜின் பொருட்டே எழுதப்பட்டதா?' என்றெல்லாம் பல கேள்விகளைக் கேட்டுக் கொண்டே. என் மனம் வேறு காரணம் ஏதேனும் இருக்குமோ என்ற தேடுதலில் இறங்கியது. அதில் தர்க்கரீதியாய் என் முடிவு வேறு மாதிரியாய் அமைந்தது.

'பொது வாழ்க்கைக்கு வருகிற ஒவ்வொருவரின் செயலுக்கும் சுய அவிலாஷைகளை. விட. மக்கள் நலன் சார்ந்த சிந்தனைகளே அதிகம் இருக்க வேண்டும்' என்ற இலக்கணம் பொருந்தும். ஜனநாயக அமைப்பிலேயே இந்த இலக்கணம் பொருந்துமானால். முடியாட்சியில் மன்னனுக்கு இந்த. இலக்கணம் முற்றுமாகப் பொருந்தும். அதன்படி பார்த்தால். மன்னனின் தலையாய கடமைகளில் முதன்மையானது - குடிமக்கள் பேணல். குடிமக்கள் பேணுவதென்றால். குடிமக்களுக்கு வேலைவாய்ப்பு கொடுத்தலும். அவர்களது அன்றாட. வாழ்வு நடக்க வழி செய்தலுமே ஆகும். இந்தக் கடமை உணர்வோடு தான் மன்னன் ஷாஜஹான் இந்த மாளிகையைக் கட்டியெழுப்ப முடிவு செய்திருக்க வேண்டும்.

அதனால்தான் நாளொன்றுக்கு இருபதாயிரம் பேர் வேலை செய்து. 20 ஆண்டுகாலம் தொடர்ந்து உழைத்து உருவாக்கும் அளவுக்கு ஷாஜஹானின் கனவு விரிவானதாக இருந்திருக்கிறது. காதலியின் மீது கொண்ட பேரன்பால் மட்டுமெனின். இவ்வளவு பெரிய திட்டம் ஷாஜஹானின் உள்ளத்தில் உதித்திருக்க முடியாது. எனவே தான் ஷாஜஹானின் தாஜ்மஹால் கனவு மனிதக் காதல் உணர்வில் உருவானதல்ல: மன்னர் ஷாஜஹானின் மக்கள் நலன்சார்ந்த சிந்தனையில்தான் உருவாகி இருக்க வேண்டுமென உறுதியாக நம்புகிறேன். மன்னன் ஷாஜஹானின் இந்த நல்லெண்ணம்தான். அவன் மாண்ட பின்னாலும். முடியாட்சி முடிந்து. மக்களாட்சி மலர்ந்த பின்னாலும் கூட தாஜ்மஹால் மக்களுக்கு வேலைவாய்ப்பளிக்கும் ஒரு தொழில் கேந்திரமாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறது. ஆமாம்: இன்றைக்கும் தாஜ்மஹாலைப் பார்க்க வருகிற சுற்றுலாவாசிகளை நம்பி ஆக்ரா நகரில் பல்லாயிரம் மக்கள் வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்; தாஜ்மஹால் வாழ்வளித்துக் கொண்டிருக்கிறது.

'செத்தும் கொடுத்தான் சீதக்காதி' என்பார்களே அப்படி ஷாஜஹான் எழுப்பிய தாஜ்மஹால் 400 ஆண்டுகளாய் மக்கள் வாழ்க்கைக்கு உதவியாய் நின்று கொண்டிருக்கிறது... இன்னும் இது தொடரும். மனிதனுக்கு மூப்பு உண்டு:

Koviloor Digital Library

மரணம் உண்டு ஆனால் அவன் நல்லெண்ணங்களுக்கு மறைவில்லை என்பதற்கு தாஜ்மஹால் சாகாவரம் பெற்ற சான்று.

'ஷாஜஹானின் தாஜ்மஹால் கனவுக்கு மக்களுக்கு வேலைவாய்பு என்ற அரசக் காரணமாக அமைந்ததுபோல் ராமன் சீதையை தீக்குளிக்கப் பணித்ததும் சந்தேகத்தால் அல்ல: ராஜாராமனின் அரசநீதியே காரணம்.

தாய் சொல் தட்டாத ராமன் கானகம் ஏகி, மனையாளின் ஆசைக்காக மாயமான் தேடி ஓட, அப்போது ராமன் சென்ற திசையிலிருந்து 'காப்பாற்றுங்கள்' என்ற குரல் வர, சீதை லக்குவனைப் போகச்சொல்லுகிறாள்; அண்ணலுக்கு ஏதோ ஆபத்து என்று புலம்புகிறாள். ஆனால், 'அண்ணனுக்கு எந்தத் தீங்கும் நேர்ந்திருக்காது. உங்களுக்குக் காவல் நிற்க வேண்டும் என்பது அண்ணனின் கட்டளை' என்று போக மறுக்கிறான் லக்குவன்.

இதைப் புரிந்து கொள்ளாமல், சீதா தேவி லக்குவனையே சந்தேகிக்கிறாள்.... அதனால் துடிதுடித்துப் போகிறான் லக்குவன். தாயைப்போல் வணங்கிப் கொண்டிருக்கிற நம்மையே அண்ணியார் சந்தேகப்பட்டு விட்டார்களே என்று புழுவாய்த் துடிக்கிறான்.... இந்த விவரம் தெரிந்ததும் ராமன் மௌனமே சாதிக்கிறான். ஏனென்றால் அன்று அவன் சீதாராமன். ஆனால் வனவாசம் முடித்து பட்டாபிஷேகம் முடிந்ததும், சீதை மீது சந்தேகக்கணை ஒன்று விழுகிறது. இப்போது சீதையைத் தீக்குளித்து மீண்டு வர வேண்டும் என்று ராமன் தீர்ப்பு வழங்குகிறான்... அன்று கானகத்தில் தன் தம்பிமீது அடாத சந்தேகம் கொண்டு, லக்குவன் மனதை நோகடித்த குற்றத்திற்கு ராஜராமன் தண்டனையாகக் கொடுத்ததே சீதை தீக்குளிப்பு.

இப்படி தாஜ்மஹாலுக்கும், சீதை தீக்குளிப்புக்கும் பின்னணியாக நின்றது அரச கடமைகளே தவிர, மும்தாஜின் கணவன் ஷாஜஹானின் காதல் உணர்வோ, தனி மனிதன் ராமனின் சந்தேக நெருப்போ அல்ல....

வரலாறு என் சிந்தனையை ஏற்குமா என்று தெரியாது; என் நெஞ்சம் இப்படித்தான் தாஜ்மஹாலின் பின்னணியைப் பற்றிச் சிந்திக்கிறது.

- வி.என். சிதம்பரம் அவர்கள் எழுதியுள்ள
"நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும்" நூலிலிருந்து

முதல் இதழே கற்பகம் தான்

"நகரத்தார் குரல்" ஆரம்பித்த ஆண்டாகிய 1982 - பிப்ரவரியில் வெளியிட்ட முதல் இதழின் அட்டைப் படமே பிள்ளையார்பட்டி கற்பக விநாயகர் தான் மீண்டும் இப்போது வந்துள்ள இந்த இதழின் அட்டைப்பட நாயகர் நம் கற்பகம் தான் கற்பக விநாயகர் பற்றிய செய்திகளே நிறைய எழுதி வெளியிட அருள்பாலிக்க கற்பக மூர்த்தியை நன்றியுடன் வணங்கி மகிழ்கிறோம்.

ஆசிரியர்

Koviloor Digital Library

பிரதட்சனம்

1. பிரதட்சணம் செய்யும்போது அடிமேல் அடி எடுத்து வைப்பது போலச் செய்தல் வேண்டும்.

2. கைகளை வீசிக்கொண்டு அவசர அவசரமாக செல்லுதல் கூடாது.

3. தெய்வப் பாடலையோ, அல்லது தெய்வநாமங்களையோ, அல்லது தெய்வத் தோத்திரங்களையோ சொல்லிக்கொண்டு பிரதட்சணம் செய்தல் வேண்டும்.

காசிகங்கை

காசியிலுள்ள கங்கை காசிவிஸ்வ நாதரின் சொத்து காசியில் இருந்து கங்கை நீரை எடுத்து வருவது வழக்கம். இது தவறு. சிவக்சொத்து குல நாசம். காசி கங்கையை எடுத்து அங்குள்ள விஸ்வநாதர் லிங்கத்தின் மீதோ அல்லது வேறு லிங்கத்தின் மீதோ வில்வதளம் வைத்து அபிஷேகம் செய்வது சிறப்பு. ஆகவே காசியில் கங்கா தீர்த்தத்தை எடுக்காமல் அலகாபாத்தில் உள்ள ப்ரயாகை என்னும் திரிவேணி சங்கமத்திலோ அல்லது ஹரித்துவாரிலோ கங்கையை எடுத்து செம்பில் அடைத்து வீட்டிற்கு எடுத்து வந்து பூசை செய்யலாம்.

துளசி மாடம்

துளசி மாடம் கட்டித்தினமும் பூஜை செய்தால் குடும்பத்துக்கு மேலும் நன்மைகள் வந்து கொண்டே இருக்கும் மாலையில் துளசி மாடத்தில் விளக்கேற்றி வந்தால், வற்றாத செல்வம் பெற்று வாழலாம்.

விலங்குகள்பால் கம்பன் காட்டும் அன்பு

முந்தைய காலந்தொட்டு இன்றுவரை விலங்குகள் கொடியின் சின்ன மாகவும் தெய்வங்களின் வாகனமாகவும் பயன் படுத்தப்பட்டன. இன்றும் நமது குல தெய்வ வழிபாடுகளில் முதலிடம் பெறுவது குதிரை, யானை, மயில் சிங்கம், எலி, ஆடு, குரங்கு, எத்தனையோ என்று சொல்லலாம்.

கம்பர் காவியத்துள் பாடப்பெற்ற 12000 பாடல்களில் பல இடங்களில் விலங்குகள் இடம் பெறுவது குறிப்பிட வேண்டிய ஒன்றாகும்.

யானையைப் பற்றி 784 பாடல்களில் குறிப்பிடுகிறார். யானை, வேழம், நாகம், வெங்கரி, என்றெல்லாம் குறிப்பிட்டு உள்ளார்.

குதிரையை 377 பாடல்களிலும்,
சிங்கத்தைப்பற்றி 197 பாடல்களிலும்,
புலியைப்பற்றி 49 பாடல்களிலும்,
எலியைப்பற்றி 4 பாடல்களிலும்,
49 பாடல்களில் பசுவையும்,
62 பாடல்களில் காளையையும்,
18 பாடல்களில் எருமையையும்,
5 பாடல்களில் ஒட்டகத்தையும்,
32 பாடல்களில் நாயையும்,
13 பாடல்களில் நரியையும்,
5 பாடல்களில் கழுதையையும்,
83 பாடல்களில் மானைப்பற்றியும்,
9 பாடல்களில் முயலைப்பற்றியும்
குறிப்பிட்டுள்ளார். குரங்கு முதல் பறவை வரை பலவற்றை பாத்திரப் படைப்பாகவே ஆக்கியுள்ள கம்பன் விலங்குகளின் பால் காட்டுகிற அன்பு மெய்சிலிர்க்க வைக்கிறது.

குறிப்பாக எல்லா ஞானவான் களுமே மிருகங்களின் மீது மிகுந்த பற்று வைத்தது நமக்கு தெளிவாக தெரிகிறது. வாயில்லா ஜீவன்களும் நாமும் வாஞ்சையைக் காட்டுவோமே.

Koviloor Digital Library

பகவான் ஸ்ரீ சுரேஷ்வரர்

சுரூர், மாவட்டம், குளித்தலையில் விரிந்த காவிரியின் தென்கரையில் அமைந்திருக்கிறது. ஸ்ரீ சக்கரபீடம். இங்கு பகவான் ஸ்ரீ சுரேஷ்வரானந்த சரஸ்வதி ஸ்ரீ சக்கரத்தின் பீடாதிபதியாக இருந்து மன்னுயிர்களுக்கு நல்லாசி வழங்கி வருகிறார்.

காசிக்கு நிகரான கடம்பந்துரை காவிரியின் தென்கரையிலே உள்ள குளித்தலையில் உள்ளது. காசியில் விஸ்வேஸ்வரர் கங்கையையும் அதன் கரையிலே மயானத்தையும் பார்த்துக் கொண்டிருப்பது போல குளித்தலையிலே கடம்பவனேஸ்வரர் காவிரியையும் அதன் கரையிலே உள்ள மயானத்தையும் பார்த்துக் கொண்டிருக்கிறார். இங்கு திருமால், பிரம்மா, கண்ணுவர், அகஸ்தியர் முதலானவர்கள் வந்து கடம்பவனேஸ்வரரை பூஜை செய்துள்ளனர். இதன் அருகில் அய்யர்மலை, ஈங்கோய்மலை என்ற இரு மலைகள் மீதும் பரமேஷ்வரன் இருந்து தன்னைநாடி வருபவர்களுக்கு நல்லருள் புரிந்துக் கொண்டிருக்கிறார். காலைக்கடம்பர், மத்தியானச் சொக்கர், மாலை ஈய்ங்கோய்நாதர் என்று குளித்தலையிலிருந்து இந்த மூன்று ஸ்தலங்களும் சோமாஸ் கந்தர் வடிவிலே அமைந்துள்ளது காலை பூஜை கடம்பர் கோவிலிலும், மதியம் (உச்சி கால) பூஜை அய்யர்மலையிலும், மாலை (சாயரட்சை) பூஜை ஈய்ங்கோய்மாலையிலும் ஒரே நாளில் தரிசிப்பது மிகவும் சிறப்பு. நகரத்தார்கள் அதிகம் வந்து தரிசிப்பது வழக்கம்.

இப்படி பெருமை வாய்ந்த கடம்பன் துறையிலே அகஸ்தியர் பூஜை செய்த இடத்திலே ஸ்ரீசக்கரபீடம் அமைந்திருக்கிறது. இங்குள்ள பகவான் ஸ்ரீ சுரேஷ்வரானந்த சரஸ்வதி இளம்துறவி. கருவில் உருவாகும்போதே அம்பிகையின் அருள் பெற்று. அம்பாளாக, நடமாடும் தெய்வமாக, காண்பவரை கவர்ந்திழுக்கும் காந்தமோ என்று எண்ணுமளவுக்கு கனிந்த பார்வை, புன்சிரிப்பும் மாறாத முகம். தெய்வீகத்தில் நம்பிக்கை இல்லாமல் இருந்தவர்களும் கூட பகவானை கண்டவுடன் தங்களை மறந்து அடிபணிந்து ஆட்கொண்டு குருவாக

Koviloor Digital Library

வரித்துக் கொள்கின்றனர். எத்தனையோ சொல்லுக்கடங்காத பேர்கள் வந்து அவர்களின் இன்னல்கள் தீர்வதும், நோய்கள் விலகுவதும். செல்வ செழிப்பு உண்டாவதும் அன்றாட நிகழ்ச்சிகள். பல பெயர்களில் மக்களை காக்கும் அன்னை பராசக்தி. ஸ்ரீ சக்கர பீடத்திலே சோட்டானிக்கரை பகவதியாக காட்சி தந்து கொண்டிருக்கிறாள். பகவானின் கருணையினால் நடக்கும் அதிசயங்களை எழுதுவதற்கு இடம் போதாது.

பகவானுக்கு 31-வது ஜெயந்தி சென்ற 30.3.98 திங்கட்கிழமை வெகு விமர்சியாக ஸ்ரீசக்கர பீடத்தில் கொண்டாடப்பட்டது. சுவாமி அவர்கள். காளி அவதரித்த பரணி நட்சத்திரத்தில் அவதரித்தவர்கள். எந்த ஒருவராலும் சீக்கிரத்தில் உபதேசிக்க முடியாத " ஸ்ரீ வித்தையை" அதாவது அம்பாளை பூஜிப்பதில் மிகமிக சிறப்பான ஒரு முறை 'ஸ்ரீ வித்தை' என்பது. இப்படிபட்ட வித்தையை மந்திரங்களை பிழையில்லாமல் உச்சரித்து. யாகங்கள். ஹோமங்கள் செய்யக்கூடிய அளவிலே இங்கு உள்ள சில் ஆண். பெண் இருபாலர்களையும் தேர்ந்து எடுத்து உபதேசித்து உள்ளார்கள். வேதம் கற்ற சிவாச்சாரியர்கள் செய்யும் பூஜைகள், ஹோமங்களை உபாசகர்கள் செய்வது மிகவும் போற்றத்தக்கது.

பகவானின் ஜெயந்தியிலே பல கலை நிகழ்ச்சிகள் கச்சேரிகள் நடந்தன. அவற்றில் எல்லாம் சிகரம் வைத்தது போல பகவான் அவர்கள் மகாமாரியம்மன் போல கொலு விருந்து நல்லருள் பாலித்ததும் பக்தர்கள் பாத பூஜை செய்ததும் மிகச் சிறப்பு. பக்தர்கள் சுவாமியின் பாதத்தில் தன அபிஷேகம் செய்து மகிழ்ந்தனர். பகவான் நகரத்தார்களிடம் கனிவான அன்பு மிகக் கொண்டவர்கள். இந்த ஜெயந்தி நிகழ்ச்சிகளுக்கு நகரத்தார் சமூகத்தவரும் மீனாட்சியின் அருள் ஆசியும் பெற்றவருமான மீனாட்சிமைந்தன் வி. என். சிதம்பரம் அவர்கள் தலைமை தாங்கி உபாசகர்களுக்கு பரிசு வழங்கினார்கள். நடராஜபுரத்தைச் சேர்ந்தவரும் பென்னர் இந்தியா நிறுவனத்தின் பொது மேலாளருமான எல். நாகப்பச் செட்டியார் முன்னிலை வகித்தது குறிப்பிடத்தக்கது.

எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லால் வேறொன்றும் அறியேன் என்றது போல நகரத்தார்களுக்காக ஒவ்வொரு வருடமும் ஆடி மாத பவுர்ணமி விழாவை நகரத்தார் விழாவாக கொண்டாடி காவிரியில் அம்பாளை வைத்து அபிசேகம் செய்து அலங்காரத்துடன் கோலகலமாக நதி பூஜை செய்து கொண்டாடுகிறார்கள். இங்குள்ள கடம்பர் கோவிலில் தேவகோட்டையைச் சேர்ந்த மைனர். வீரப்பசெட்டியார் திருப்பணியும் இருக்கிறது. இங்கு வருபவர்களுக்கு கீழச்சீவல்பட்டி பசுமடம் தேனப்ப செட்டியார் அவர்களுடைய பசுமடத்தில் உபசாரம் செய்து தங்கவைப்பது மிகவும் சிறப்பாக உள்ளது.

டாக்டர் . பெரி . இராமநாதன். குளித்தலை

கூட்டுத் திருமணம்

திருச்சி நகரத்தார் சங்கத்தின் சார்பில் பிள்ளையார்பட்டியில் வருகிற ஆவணி மாதம் 182 (3–9–98) வியாழக் கிழமை கூட்டுத் திருமணம் நடைபெற இருக்கிறது. மேற்படி கூட்டுத் திருமணத்தில் திருமணம் செய்ய விரும்புவோர் கீழ்கண்ட முகவரியில் தொடர்பு கொள்ளலாம். கடைசி தேதி 1–8–98.

நகரத்தார் சங்கம், No. 2 ஒத்தமால் தெரு, திருச்சி – 620002

Koviloor Digital Library

☎ 42405, 42406.

பழநி பரிமள விலாஸ்

S.சித்தனாதன்

ஐவ்வாது வாசனை விபூதி

ஸ்பெஷல் பஞ்சாமிர்தம்

சிறந்தது.

வாங்கி உபயோகியுங்கள்.

S.சித்தனாதன் சன்ஸ், அடிவாரம், பழநி. 624 601.

பாஸ்போர்ட், விசா, விமான டிக்கெட் ஆகியன பெறுவதற்கும் சுற்றுலாப் பேருந்து, வேன், ஏ.சி கார், ஏ.சி இல்லாத கார் தேவைக்கும் அணுக வேண்டுகிறோம். சாப்பாடு தங்கும் வசதியுடன் வட இந்திய, தென் இந்தியச் சுற்றுலாக்களுக்கும் தொடர்பு கொள்ள வேண்டுகிறோம்.

சுபம் டிராவல் ஏஜன்ஸி

226, நாயக்கர் புதுத்தெரு, மதுரை – 625 001. போன்: 630712

உரிமை: சொ. சுப்பிரமணியம்

ஒரு Shree தயாரிப்பு

ஜெனித்

ஸ்டில் பைப்புகள்

எப்பொழுதும் தரம் வாய்ந்தது

- நம்பகமானது
- நீடித்து உழைக்கக்கூடியது
- நியாயமான விலை
- HFIW ஸ்டில் பைப் தயாரிப்பின் முன்னோடிகள்
- இறக்குமதி செய்யப்பட்ட தரமான இயந்திரங்களின் உதவியுடன் எங்களுடைய 'கொப்போலி ஃபேக்டரி'யில் எல்லா சைஸ் பைப்புகளும் உற்பத்தி செய்யப்படுகிறது.

திரும்பத் திரும்ப ஏதோ பைப் வாங்குவதை விட

ஒரு முறை ஜெனித் பைப் வாங்கினாலே நிம்மதி.

விநியோகஸ்தர்கள்:

ALS எண்டர் பிரைசஸ். கோயமுத்தூர் – 12

ALS எண்டர் பிரைசஸ். சென்னை – 1.

ALS டிரேட் சென்டர். ஈரோடு –3

ALS மார்கெட்டிங் கம்பெனி. திருச்சி – 8

Koviloor Digital Library

ஊழ்வினை

"ஊழ்வினை" என்பது மதவாதிகள் சொல்வது மட்டுமன்று: வாழ்க்கை அனுபவமும் காட்டும் ஒன்று.

நாம் செய்யாத ஒன்றுக்காக நாம் தண்டிக்கப் படுவோமாயின். அதன் பெயரே ஊழ்வினை. தசரதன் வரம் கொடுத்தது ஊழ்வினை. காலம் அறிந்து கைகேயி அதனை நிறைவேற்றிக் கொண்டது ஊழ்வினை. அதன்மூலம் கணவனை இழந்தது ஊழ்வினை. தந்தை வரம் கொடுக்க மகன் ராமன் காட்டுக்குப் போனது ஊழ்வினை.

மாதவி வீட்டுக்கு கோலவன் சென்றது ஊழ்வினை. கண்ணகியிடம் திரும்பி வந்ததும். அத்தனை நகைகளையும் கொடுக்கிறேன் என்ன சொன்ன கண்ணகியிடம். காற்சிலம்பை மட்டும் "தா" என்று கேட்டுப்பெற்றானே அது ஊழ்வினை. சோழநாட்டில் உறையூரில் நிறைய வணிக்கர்கள் இருந்தார்கள் அவர்களிடம் கொண்டுபோய் விற்காமல். மதுரைக்குச் சென்றானே அது ஊழ்வினை எத்தனையோ சிலம்புகளை பார்த்த பொற்கெல்லன் இதை மட்டுமே "திருட்டுச்சிலம்பு" என அரசனிடம் கொண்டுபோய்க்காட்டினானே அது ஊழ்வினை எத்தனையோ வழக்குகளைத் தீர விசாரித்து தீர்ப்பு வழங்கிய பாண்டியன் இந்த வழக்கில் மட்டும் "கள்வனைக் கொண்டு வா" என்று சொல்ல வந்து. "கொன்றுவா என்று நாத்தடுமாறினானே. அது ஊழ்வினை. அது மறு பரிசீலனைக்கே நேரம் இல்லாமல் உடனே தண்டனையை நிறைவேற்றியது ஊழ்வினை., அதுவரை வெளியேறியறியாத குலமகள். மன்றேறி முழக்கமிட்டு மதுரையையே நெருப்பிலிடும் மாகாளி சக்தியாக வடிவெடுத்தாளே அது ஊழ்வினை. பார்ப்பார். பசுக்கள். பிணியோர். முதியோர் தம்மை விட்டு மற்றோரைக் தீண்டும் நெருப்பே என்று ஆணையிட்டாளே அது ஊழ்வினை.

ஆமாம் அவை எல்லாவற்றுக்கும் ஒரே பதில் ஊழ்வினை தான் "ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும். பாவமோ புண்ணியமோ ஏழு தலைமுறைக்கு வரும் என்கிறது இந்த தர்மம்.

செய்வினை திருத்தப்படலாம் ஊழ்வினையைப் திருத்தவே முடியாது.

அறிவிப்பு

வாசகர்களே!

உங்களிடமிருந்து விமர்சனங்கள் ஆலோசனைகள் வரவேற்கப்படுகிறது. உங்கள் விமர்சனங்கள், ஆலோசனைகள் மலரில் பிரசுரிக்கப்படும்.

எக்ஸ்போ பிரிண்டர்ஸ். 20. கிருஷ்ணாபுரம் 4–வது குறுக்குத்தெரு, மதுரை – 625 009–ல் அச்சிட்டு நடராஜ் அண்ணாமலை அவர்களால் 108–109, நேதாஜிரோடு, மதுரை – 625 001 லிருந்து வெளியிடப்படுகிறது.

ஆசிரியர்: வி.என். சிதம்பரம்

Koviloor Digital Library

நகரத்தார்குரல்

அன்பான பெரியோர்களே!

நமது இதழின் தயாரிப்புச் செலவு, நிர்வாகச் செலவு ஆகியவை நாளுக்கு நாள் கூடிக்கொண்டே செல்லும் நிலையில் இதழின் விளம்பரக் கட்டணம் சந்தாக் கட்டணத்தை உயர்த்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

1-7-1998 முதல் கீழ்காணும் விதத்தில் கட்டணத்தை உயர்த்தி உள்ளோம். விளம்பரதாரர்களும், சந்தாதாரர்களும் ஏற்றுக்கொண்டு தங்களது அன்பையும் நல்லாதரவையும் தொடர்ந்து தருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

விளம்பர விபரம்

அட்டை (வெளிப்பக்கம்) கலர்	ரூ	1,000.00
அட்டை (உள்பக்கம்) கலர்	ரூ	700.00
முழுப்பக்கம்	ரூ	500.00
அரைப்பக்கம்	ரூ	250.00
கால்பக்கம்	ரூ	125.00

தொடர்ச்சியாக 12 மாதங்களுக்கு மேல் வெளியிடும் விளம்பரங்களுக்கு கட்டணத்தில் சலுகை உண்டு

மணமகன் தேவை, மணமகள் தேவை, சுவீகாரம் போன்ற விளம்பரங்கள் முக்கால் கட்டணத்தில் வெளியிடப்பெறும்

திருமணப்படங்கள், மணிவிழாப்படங்கள் செய்தியுடன் வெளியிடக் கட்டணம் (அரைபக்கம்) ரூ 200.00

சந்தா விவரம்

டெபாசிட் சந்தா (உள்நாடு மட்டும்)	ரூ	500.00
ஓராண்டுச் சந்தா (உள்நாடு மட்டும்)	ரூ	60.00
டெபாசிட் சந்தா (வெளிநாடு)	ரூ	2000.00
ஓராண்டுச் சந்தா (வெளிநாடு)	ரூ	350.00

– *ஆசிரியர்*

Koviloor Digital Library

கங்காஸ்நானம்

கங்கையில் ஒரு முறை மூழ்கி எழுந்தால், எல்லா பாவங்களும் தொலைந்து மோட்சம் அடைந்து விடலாம் என்பது நம்பிக்கை, இது உண்மையானால் கங்கை நிரீலேயே சதா சர்வகாலமும் வாழ்ந்து கொண்டு இருக்கும் மீன்களும் ஆமைகளும் மோட்சத்திற்கல்லவா போகவேண்டும். வெறும் கங்கா ஸ்நானம் பாவத்தைப் போக்கிவிடாது. பாவங்களை நினைத்து வருந்தும் மனோ பாவமும், மீண்டும் அந்த பாவங்களைச் செய்யாதிருக்கும் வைராக்கியமுமே ஒருவனைப் பவித்திரமாக்க முடியும். இந்த வைராக்கியத்தைப் பெறவே கங்கா ஸ்நானம்

"காது" வலிக் "காது"

நடந்தால் கால்வலிக்கும் உட்கார்ந்தால் இடுப்பு வலிக்கும். அதிகம் சாப்பிட்டால் வயிறு வலிக்கும். ஓடினால் நெஞ்சு வலிக்கும். வேலை செய்தால் உடம்பு வலிக்கும். பேசினால் வாய் வலிக்கும். மென்றுதின்றால் பல் வலிக்கும். பார்த்தால் கண் வலிக்கும். குணிஞ்சா கழுத்து வலிக்கும். நிமிர்ந்தால் முதுகு வலிக்கும். ஆனால் கேட்டால் காது மட்டும் வலிக்காது இரு காது ஒருக்காலும் வலிக்காது. ஆகவே தினமும் நல்லவற்றைக் கேளுங்கள்.

- வாரியார் சுவாமிகளின் உரை

உ

சிவமயம்

சூடிக் கொடுத்த சுடர்க்கொடி

சிவபூசைக் செல்வி

திருவாத்தாள் பழனியப்பன்

29.07.1936 23.05.1998

"ஒருப்படும் உள்ளத் தன்மை உண்மையால் தமக்கு நேர்ந்த திருப்பணி பலவும் செய்து சிவபத நிழலில் சேர்ந்தார்

(சிவன் திருவடி ஒன்றிலே சென்ற மனநிலை இருந்தமையினாலே, தமக்கு அமைந்த (மலர்மாலை, திருவிளக்குப் போன்ற) திருப்பணிகள் பலவற்றையும் செய்து சிவபொருமானின் திருவடி நிழலை அடைந்தார்)

- பெரியபுராணம்

எஸ்எஸ்ரெம் பழனியப்பன்
சேது பழனியப்பன்
31/ SS 18/1c, 47500 SUBANGJAYA, TEL : 7333673

Koviloor Digital Library

உ

சிவமயம்

மூன்றாம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம் 27.7.1964

மறைவு 23.7.1995

முரு. கா. அ. சொ. காசிவிஸ்வநாதன்

கடியாபட்டி (இராமச்சந்திரபுரம்)

மாசில் அன்பு நிறைந்த காசி விஸ்வநாத
நீ வாழும் போது சிரித்தாய் போகும் போது அழவைத்தாய்
வாழ்க்கையின் இலக்கணமாக வாழ்ந்தாய்
எங்கள் எண்ணங்களை ஒன்றாக இணைத்தாய்
நம் பாசங்களை நெஞ்சோடு பிணைத்தாய்
உயிரெனும் உறவில் மட்டும் எங்களை விட்டுப் பிரிந்தாய்
நாங்கள் மூட்டாத தீயிலே எரிந்தாய்
உனக்கு கேட்குமே எங்கள் நெஞ்சொலி
நாங்கள் செலுத்திகிறோம் கண்ணீர் அஞ்சலி

உன் நினைவில் வாடும்

பெற்றோர் – அ. சொக்கலிங்கம், வள்ளியம்மை சொக்கலிங்கம்
மனைவி – சித்ரா (எ) வள்ளியம்மை B. Com
மகன் – சுதன் (எ) சொக்கலிங்கம்
தம்பி – சொ. கிருஷ்ணன்
தங்கை – லெ. சிவகாமி M. Com
மாப்பிள்ளை – அ. லெட்சுமணன் DCE. B.E.,
தங்கைமகன் – லெ. அபிலாஸ் (எ) அண்ணாமலை
அய்யா – சுப. அழகப்ப செட்டியார்

மற்றும் மறைவால் வாடும் குடும்பத்தார்

எண் – 5. அகநானூறு தெரு, மேத்தா நகர்,
சேலையூர் அஞ்சல் – (சென்னை – 600073)

Koviloor Digital Library

தரமான
ரெடிமேட் ஆடைகள்

ரெயின்போ

அம்மன் சன்னதி மதுரை

PHONE : 622225

KOVILOOR ANCIENT LIBRARY, KOVILOOR
A. No. 45784

Koviloor Digital Library

குமரன் சில்க்
குமரன் சில்க்
குமரன் சில்க்
குமரன் சில்க்
குமரன் சில்க்
குமரன் சில்க்
குமரன் சில்க்
குமரன் சில்க்
குமரன் சில்க்

பட்டு மாளிகை

3, வெங்கலக்கடை தெரு, மதுரை-625001
போன்: 622916; 25789

குமரன் சில்க்

Koviloor Digital Library

ROC M7 331178/81 dt. 7.5.82
Regd. NewsPaper Regd. No. TN/MA-HO/13/98

The Bank of Madura credo:

"Time is Money"

Announcing 3 new low cost High Speed Funds Transfer Schemes. Only from Bank of Madura!

2 Hour Transfer!	Cheque Speed	Any place Deposit
• Funds transferred to any Bank of Madura account in any branch, in 2 hours. • Open to all those with an account in Bank of Madura. • Open to non-customers who deposit cash under Rs. 50,000/- • Charges are low and very competitive. • In case credit is delayed, the Bank will pay interest at 2% over the Savings Bank rate for the delayed period.	• Outstation cheques (drawn on a centre where Bank of Madura has a branch) credited in 7 working days. • Open to all those with an account in Bank of Madura. • Charges are low and very competitive. • In case credit is delayed, the Bank will pay interest at 2% over the Savings Bank rate for the delayed period.	• Cheques collected at any Bank of Madura branch and credited to your main account (in Bank of Madura) 4 days. • The only bank to offer this service. • Open to all those with an account in Bank of Madura. • Charges are low and very competitive • In case credit is delayed, the Bank will pay interest at 2% over the Savings Bank rate for the delayed period.

Contact any of our branches for details.

Bank of Madura Ltd.

Banking by Design